உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

| மலர் 36 | பிங்கள - ஆனி - 10—7—77 | இதழ் 8 |
|---|---|---|

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## "நல்லறங்காத்து நாடாள்க"

**நல்வாழ்த்து:**

தமிழ் நாட்டில், மக்களால் முறையாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற புதிய அரசு திரு. எம். ஜி இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கிறது. செந்தமிழிற்கும், சிவநெறிக்கும் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக அருந் தொண்டாற்றி வரும் "ஞானசம்பந்தம்" புதிய ஆட்சிக்கு நல் வரவு கூறி வாழ்த்தி வரவேற்கிறது. 'நல்லறங்காத்து நாடாள்க' என வாழ்த்துகிறது.

**காந்தியப்பற்று:**

தமிழ் நாட்டின் புதிய முதலமைச்சராகப் பொறுப்பேற் றிருக்கும் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் கோடிக் கணக்கான தமிழ் மக்களால் விரும்பப்படும் நல்ல நடிப் பியற் கலைஞர். திரைப்படத் தொழிலை வாழ்க்கைக்காக

மேற்கொண்டிருப்பினும், அதனை அரிய கருவியாக ஆக்கிக் கொண்டு மக்கள் உள்ளத்தில் நன்னெறிகளையும், பண்பாட்டினையும் விதைத்தவர். இளமைக் காலத்திலேயே காந்தியடிகளால் ஈர்க்கப்பெற்றவர். முதலமைச்சராகப் பதவிப் பொறுப்பேற்ற காலை முதலில் காந்தியடிகளின் சிலைக்கு மாலையிட்டும் காமராஜர், பெரியார், அண்ணாதுரை முதலியோர் சிலைகளுக்கு மாலை அணிவித்தும் மரியாதை தெரிவித்து ஆட்சிப் பொறுப்பேற்றமை, பெரியோர்களை மதித்துப் போற்றும் அவரது பண்பாட்டிற்குச் சான்று பகர்கிறது.

சான்றோர் இணக்கம் :

சமயத் துறையில் காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களைச் சந்தித்துப், போற்றியுள்ளார் எனவும், திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களிடம் சமயத்துறை தொடர்பான செய்திகளைக்கேட்டுப்பாராட்டியுள்ளார்எனவும்தெரியவருகிறது. இந்நிலை இவர் வாழ்வில் ஒளி ஊட்டுவதாகும். தாய் வழியே உயர்ந்த பண்பாடுகளைப் பெற்று, உலகில் நன்னெறிகளைவிடாது கடைப்பிடித்துவரும் முதலமைச்சர் அவர்கள், கோடிக்கணக்கான தமிழ் மக்களின் இயல்புகளையும், அவர்களது தேவைகளையும் நன்கு உணர்ந்தவர்.

தூய வாழ்வு :

முதலமைச்சர் அவர்கள், சொல்வேறு, செயல்வேறு என்று வாழ்கின்ற உலகில் கண்ணியம் மிக்கவராக - நல்லவராக வாழ்ந்து வருபவர். திரைப்படங்களில் நல்ல பண்புகளைப் புகட்டும் பாத்திரங்களையே ஏற்று நடித்ததோடு, தனி வாழ்விலும் அவற்றைப் பின்பற்றி நிற்பவர். திரைப்படஉலகில் காணப்படும் மது அருந்துதல் முதலிய தீய பழக்க வழக்கங்களை முற்றிலும் தனி வாழ்வில் நீக்கி வாழ்தல் இவரது சிறப்பிற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது.

முதல் வெற்றி :

முதலமைச்சராகப் பதவி ஏற்றவுடனேயே, தமிழகத்தின் நெற்களஞ்சியமாகவிளங்கும் தஞ்சைத்தரணிக்குக்காவிரிநீரைப் பெற்றுத் தரும் முயற்சிக்கு முன்னுரிமை தந்தார். நட்புணர்வுடன் அண்டை மாநிலமாகிய கர்நாடகத்தோடு தொடர்பு கொண்டு முதன் முயற்சியில் வெற்றியும் பெற்றார். முதலமைச்சர்

அவர்களின் செயல் தமிழ் மக்களுக்குப் பெரிதும் நம்பிக்கையூட்டுவதாக அமைந்துள்ளது.

**கலைகளின் தாயகம் :**

புதிய அரசிடம், அறநிலையங்கள் நியாயமான தங்கள் நிலையை எடுத்துரைத்து நிவாரணம்பெற விரும்புகின்றன. கலைத்துறையில் ஈடுபாடு மிக்க முதலமைச்சர் பல்லாயிரம் ஆண்டுக் காலமாக, இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழின் கூறுபாடுகளும் தமிழகத்தின் திருக் கோயில்களிலும் சமய நிலையங்களிலும் எவ்வாறெல்லாம் போற்றி வளர்க்கப் பெற்றன என்பதனை நன்றாக அறிந்தவர். பக்தியோடு பண்பாட்டினையும், உயரிய கலைகளையும் போற்றி வளர்த்துவரும் தாய் வீடுகளாக விளங்கும் சமய - அற நிறுவனங்களின் வளர்ச்சியில் முதலமைச்சர் அவர்கள் பேரீடுபாடுகொண்டு விளங்குவார்கள் என்று நம்புகிறோம்.

**கூட்டுப் பொறுப்பு :**

உண்மையில் அரசுக்கும் அறநிலையங்களுக்குமிடையே நெருக்கமான தொடர்பு உண்டு அரசு மக்களின் புறத் தேவைகளாகிய உணவு, உடை, உறையுள் முதலியவற்றை வழங்கப் பாடுபடுகின்றது. அறநிலையங்களோ மக்களின் நெஞ்சங்களில் தூய்மை, அன்பு, அருள், பக்தி இவற்றை விளைத்து, அவர்களின் உள்ளத்தைப் பண்படுத்தி அவர்களை உண்மையான மக்களாக வாழச் செய்யும் பெரும் பணியில் தம்மை அர்ப்பணித்துக்கொண்டுள்ளன. சுருங்கச்சொன்னால் உடலைத் திருத்தி வளர்ப்பது அரசு. உள்ளத்தைத் திருத்தி வளர்ப்பது சமயம். உள்ளம் திருந்தி வளர்ந்தால்தான் உடல் திருத்தமாக - செழிப்பாக வளரும். எனவே உடல் வளர உள்ளம் வளர வேண்டுவது போலவே அரசு வளர அறநிலையங்கள் வளரவேண்டுவதும் இன்றியமையாதது என்பது தெளிவாகும்.

**தேக்க நிலை :**

திருக்கோயில் மற்றும் திருமடங்கள் போன்ற சமய அற நிலையங்கள் மக்கள் வாழ்வியலோடு நெருக்கமான தொடர்புடையவை. இவ்வறநிலையங்களுக்குப் பெரும் நன்கொடைகள்வழங்கிய பெருமக்கள், இவற்றைச் சார்ந்து லக்ஷக்கணக்கான குடும்பங்கள் வாழ்கின்றன என்ற உணர்வுடனேயே வழங்கியுள்ளனர். இறைவன் திருப்பெயரால் லட்சக் கணக்கான

மக்களுக்கு வாழ்வளித்து வந்த இவ்வற நிலையங்கள், இன்று, பல்வேறு சட்டங்களாலும், அரசியல் குறுக்கீடுகளினாலும் வருவாய் இழந்து, தூய தொண்டுகளைத் தொடர இயலாது தேங்கி நிற்கின்றன.

**முரண்பாடுகள் பல :**

தமிழ் நாட்டில் ஏதேனும் ஒருவகையில் சொந்தமான வருவாய் உடைய - கட்டிடங்கள், நஞ்சை, புஞ்சை நிலங்கள் உடைய கோயில்கள் சுமார் 50 ஆயிரம் உள்ளன. இவைகளில் 23,358 அறநிலையத்துறையின் பாதுகாப்பிலும், பிற தனியார் பாதுகாப்பிலும் இயங்கிவருகின்றன. இத்தகு கோயில்நிலங்கள் ஆயிரக்கணக்கான குடிமக்களிடம் குறைந்த குத்தகைக்கு சமய - அறநிறுவனங்களால் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. நில வருவாயையே பெரிதும் நம்பியிருக்கும் அறநிலையங்களுக்கு, நல்லவிளைவிருந்தும் கூட உரிய குத்தகையினைக் குடிமக்கள் செலுத்துவது இல்லை. இதற்குப் பின்னணியாக அரசியல் குறுக்கீடுகளும் விஷமிகளின் பிரசாரங்களும் அமைகின்றன. சில ஆண்டுகளில் விளைவே இல்லை என்று குத்தகைதாரர்கள் கைவிரித்து விடுகின்றனர்.

அரசும் சிலநேரங்களில் குத்தகைப் பாக்கியினை ரத்துசெய்து உத்தரவுகள் பிறப்பிக்கின்றது. குத்தகை பாக்கிகள் ரத்து செய்யப்பெற்றபோதும்கூட, உரிய நிலவரியினை சமய - அறநிலையங்கள் செலுத்தவேண்டுமென அரசு ஆணை பிறப்பிக்கிறது ! வருவாய் இல்லாத நிலையில் நிலவரி செலுத்தப்படவேண்டும் என்பதோடு, அறநிலையத்துறைக்கு உதவித்தொகை ( Contri - bution ) களை செலுத்த வற்புறுத்தப்படுகின்றன. இத்துடன் அமையாது, இவ்வறநிலையங்களில் பணியாற்றும் லக்ஷக்கணக்கான அர்ச்சகர், பணியாளர், அலுவலர், முதலியவர்களுக்கும் ஊதியம் வழங்கும் பொறுப்பும் இவற்றிடம் உள்ளது. இவர்கள் குறைந்த அளவான ஊதியமே பெற்றுவருபவர்கள். இக்குறைந்த அளவான ஊதியத்தையும், காலத்தில் வழங்க இயலாத நிலையில் அறநிலையங்கள் உள்ளன. ஏனைய அரசுத் துறை ஊழியர்களுக்கு ஒப்ப இவர்களுக்கும் ஊதியம் வழங்கப் பெறவேண்டுமென்பது முறையானதே. ஆயினும் வருவாய் இன்றி நித்திய வழிபாட்டுக்கே தடை ஏற்பட்டிருக்கும்போது அர்ச்சகர் முதலியோரது ஊதியங்களை உயர்த்தவேண்டுமென்று வற்புறுத்தப்படுவதை அறநிலையங்கள் ஏற்று நடத்த இயலாத நிலையில் இருக்கின்றன.

வேண்டுகோள் :

எனவே, சமய – மற்றும் அறநிறுவனங்களின் வருவாய்கள் தடையின்றி அவற்றிற்குக் கிடைக்கும்படி அரசு உறுதி செய்வது ஒன்றே தற்போது உடனடியான எதிர்பார்ப்பாகும். சமய அற நிறுவனங்களுக்குப் பின்னே எவ்வித அரசியல் உள்நோக்கமும் இல்லாது, அறநிலையங்களின் நடைமுறை வளர்ச்சிக்குப் புதிய அரசு பெருந்துணையாக அமையும் என்று நம்புகின்றோம். சமயஞ் சாராத அரசாக இருந்தாலும்கூட, லக்ஷக்கணக்கான ஏழைக் குடும்பங்களின் வாழ்விற்கு ஆதாரமாக விளங்குவனவும், கோடிக் கணக்கான மக்களின் பண்பாட்டு வளர்ச்சியின் வேர்க்கால் களாகத் திகழ்வனவும், மொழி மற்றும் கலைகளின் அழியாச் சின்னங்களாகத் திகழ்வனவுமாகிய சமய – அறநிறுவனங் களின் வளத்திற்கும் – வளர்ச்சிக்கும் உதவுவது அரசின் கடமை யாகிறது.

வாழ்த்துகிறோம் :

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையினைத் தம் பொறுப்பில் வைத்திருக்கும் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் திகழும் தமிழ்நாடு அரசு மக்களுக்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற் கும் நற்பணியாற்றிச் சிறக்க "ஞானசம்பந்தம்" தனது நல்வாழ்த் துக்களைத் தெரிவித்துக்கொள்ளுவதில் பெருமகிழ்ச்சி அடை கிறது. புதிய அரசு சமய – அறநிறுவனங்களின் உண்மையான நிலைமையைத் தக்க அறிஞர்களைக் கொண்டுபரிசீலித்து அவற்றின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பனவற்றை அகற்றி, சமய – அற நிறுவனங்களின் பாதுகாப்பிற்கும் அவற்றின் பணி வளர்ச்சிக் கும் துணைநின்று ஆவன செய்யும் என்று எதிர்பார்க்கிறது தமிழ்கூறும் நல்லுலகம். 'நல்லறங்காத்து நாடாள்க' என்று புதிய அரசை வரவேற்று வாழ்த்துகிறது ஞானசம்பந்தம்.

வாழ்க அரசு! வளர்க நல்லறம்!

உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருவாசகம் பற்றி வழங்கியருளிய

# ஆசியுரை

"உருகும் மனத்தடியவர்கட்கு ஊறும்தேனை" என்பது அப்பர் அருள் வாக்கு. "உருகும் மனம் உடையார் தமக்கு உறுநோய் அடையாவே" என்பது ஞானசம்பந்தர் நல்வாக்கு.

"உருகி உருகிக் கண்களில் நீர்
ஒழுகித் துதி நாத்தழும்பேறும்
ஒப்பில் தவத்தர் உளக் கோயிற்கு
ஏற்றும் ஞானமணி விளக்கு"

என்பது விருத்தாம்பிகைப் பிள்ளைத்தமிழ்.

"உள்ளம் உருகில் உடனுவர் அல்லது
தெள்ள அரியரென் றுந்தீபற
சிற்பரச் செல்வர் என் றுந் தீபற

என்பது திருவுந்தியார்.

"உருகாதவர் பால் விழையாய்" என்பது பரஞ்சோதி திருவிளையாடல். எனவே உருகும் உள்ளம் உடையவர்கட்கு இறைவன் தேனுய் இன்னமுதமாய் தித்திக்கிறுன் என்பதும், உருகும் மனம் உடையாரை நோய் அடையா என்பதும்; உருகும் உளம்படைத்த தவச்செல்வர் உள்ளக்கோயிலில் இறைவன் ஞானமணி விளக்காக விளங்குகிறுன் என்பதும் உள்ளம் உருகு வார்க்கே இறைவன் உடனுவார் என்பதும், உருகாதவரை இறைவன் விரும்பமாட்டான் என்பதும் தெளிவாக விளங்குகின்றன.

**உள்ளம் உருக வழி:**

இவ்வருள் வாக்குக்களெல்லாம் மனிதன் உருகும் மனமுடையவனுக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை

நமக்குத் தெளிவாக அறிவிக்கின்றனர். உருகுவது எப்படி என்பதைத் திருக்களிற்றுப்படியார் நமக்குத் தெளிவிக்கின்றது. அப்பாடல் வருமாறு :

"பொருளும் மனையும் அறமறந்து போகம் மறந்துபுலன் மறந்து
கருவி கரண மவை மறந்து காலம் மறந்து கலைமறந்து
தருமம் மறந்து தவம் மறந்து தம்மை மறந்து தற்பரத்தோடு
உருகி யுருகி ஒருநீர்மை யாயே விட்டார் உய்ய வந்தார்"

இப்பாடல் உருகும் இலக்கணம் இது என்பதை நமக்குத் தெளிவாக்குகிறது. உருக்கம் வருவது எப்படி என்பதை நாம் சிந்திக்க வேண்டும். நாம் வேண்டாமலேயே நமக்கு உடலையும் கருவி கரணங்களையும் இன்பத்துன்பங்களையும் கொடுத்திருக்கின்றான் இறைவன். அப்பரம்பொருளின் கருணையை நினைந்து நன்றி உணர்வோடு போற்றித் துதித்திருக்கின்றனர் அருளாளர்கள். அவர்கள் அருளிய தோத்திரப் பாடல்களை நாம் இடைவிடாது நாளும் ஓதி வருவோமேயானால் நம் உள்ளம் உருகும் நிலையை அடையும்.

உள்ளுருக்கும் வாசகம் :

தோத்திரப் பாடல்களுக்குச் சிறந்த மொழி தமிழ் மொழி. தோத்திரப் பாடல்களுள் சிறந்தவை திருமுறைகள். அவற்றுள்ளும் சிறந்தது திருவாசகம். இந்தப் பாடல்களுக்கு உருகாதவர் எந்தப் பாடல்களுக்கும் உருக மாட்டார் என்பது பற்றியே "திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்" என்ற பழமொழியும் நாட்டில் வழங்கத் தொடங்கியிருக்கிறது. உருக்கும் திறம் தமிழ் மொழிக்கே சிறப்பாக அமைந்திருக்கிறது. அண்மையில் இத்தாலிய இளைஞர் ஒருவர் மதுரையில் நிகழ்ந்த வாரியார் விரிவுரையையும் அவர் பாடிய அருணகிரிநாதர் திருப்புகழ்ப் பாடலையும் கேட்டுக்கொண்டிருந்தார். முடிவில் அவர் முன் சென்று, "தாங்கள் இதுவரை எந்த மொழியில் பேசினீர்கள்? இம்மொழி தெரியாத என்னைத் தங்கள் பாடல் மயங்க வைத்து நெகிழ்ச்சியடையச் செய்தது" என்று ஆங்கிலத்தில் கூறினார். இந் நிகழ்ச்சி ஒன்றின் மூலமும் தமிழ்மொழி உள்ளத்தை நெகிழ்ச்சியடையச் செய்வதில் - மனம்உருகச் செய்வதில் சிறந்தது என்பதை உணரலாம். சமஸ்கிருதம் தத்துவ விளக்கத்தில் சிறந்தமொழி என்றும், இலத்தீன்மொழி சட்டத்தில் சிறந்த மொழி என்றும், ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மனி ஆகியவற்றை அறிவியல் வல்லமொழி என்றும் தமிழ்மொழி, தோத்திரங்களுக்குச் சிறந்த மொழி என்றும் அறிஞர் பெருமக்கள்

அதனதன் சிறப்பு நோக்கிப் பாராட்டியுள்ளனர். எனவேதான் எந்த வாசகத்திற்கும் உருகாவிட்டாலும் திருவாசகத்திற்கு உருகுவர் என்று கூறப்படுகிறது.

**தவறான கருத்தை மாற்றுக:**

திருவாசகத்தை ஓதிப் பழகியவர்களும் பழங்காலத்தவர்களும் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்த திருவாசகப் பாடல்களை இறக்கும் காலத்தில் ஓதச்செய்தால் இறப்போரின் உயிர் இறைவனோடு உடனுறும் என்ற பாரம்பரிய உணர்வோடு ஓதச்செய்கின்றனர். திருவாசகம் ஓதுவதால் நல்லசிந்தனையோடு பிரியும் உயிர் மீண்டும் நல்லசிந்தனையுடன் நற்பிறவி எய்தும் அல்லது வீடுபேறு அடையுமென்றே பெரியவர்கள் இவ்வாறு ஓதி வருகின்றனர். ஒருவர் இறக்கும் காலத்தில் திருவாசகம் ஓதச்செய்வது அவரது மனைவி மக்கள் முதலியசுற்றத்தாரது தலையாய கடமையாகும். இறப்பவர்களை இறைவனோடு இணைக்கமுயற்சிப்பது அவர்களுக்கு உறுதுணை ஆவதோடு நாம் அவர்களுக்குச்செய்யும் கடமையும் கைம்மாறுமாகும். இந்தச் சிந்தனையில் திருவாசகம் ஓதுவதைக் கடமையாக வைத்துப் போற்றி அதற்குப் பெருமை தேடித்தந்த பெரியவர்களின் எண்ணத்தை மற்றவர்கள் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். இறக்கும் காலத்தில் திருவாசகம் படிப்பதுபற்றிய நமது தவறான கருத்தை மாற்றிக்கொள்வது இன்றியமையாதது. மேலும் நல்ல உணர்வை வளர்க்கத் திருவாசகம் ஓதுவதை இளமையிலேயே மேற்கொள்வது அவரவர்களுக்கும் அன்றாட வாழ்விலும் அந்திய காலத்திலும் நலம் பயப்பதாகும்.

**இறைவன் எழுதிய இனிய வாசகம்:**

திருவாசகத்திற்குப் பல சிறப்புக்கள் உண்டு. அவற்றுள் ஒரு சிலவற்றை இங்கே சிந்திக்கலாம். எந்த நூலையும் இறைவன் எழுதியதாகக் கதை கூடக் கிடையாது. இறைவனே நேரில்வந்து எழுதியதாக உள்ள தனிச் சிறப்பு திருவாசகம் ஒன்றற்கே உரியது. இறைவன் எழுதியதற்கு ஒரு காரணம் கற்பிக்கின்றார் மனோன்மணிய ஆசிரியராகிய பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள். அதுவும் நமக்குச் சுவை கூட்டுகின்றது. திருவாசகத்தை ஏன் எழுதினார் என்றால் "கடையூழிக் காலத்தில் தனிமையில் நின்று ஆடிக்கொண்டிருக்கும்போது தனிமையை இனிமையாகக் கழிக்கக் கருதிய பெருமான் திருவாசகத்தைப்படித்து இன்புற வேண்டும் என்பதற்காகவே தன் கையால் திருவாசகத்தை எழுதிக்கொண்டாராம்.

" கடையூழி வரும் தனிமை கழிக்க அன்றே அம்பலத்துள்
உடையாருன் வாசகத்தில் ஒரு பிரதி கருதியதே"

## திருவாசக ஆற்றல் :

திருவாசகத்திற்கு மூலமாக உள்ளது வேதம். எல்லா நூல்களுக்கும் மூலமாக உள்ளதும் வேதமே ஆகும். இது வேதத்திற்குரிய தனிச் சிறப்பாகும். அப்படிப்பட்டவேதத்தை ஓதினால் நெஞ்சம் நெக்குருகி நிற்கின்றவர்கள் இல்லை. வேதசாரமாகிய திருவாசகத்தை ஓதினால் கருங்கல் மனம் உடையவர்களும் கண்களிலிருந்து நீர்பாய மெய்ம்மறந்து நிற்கின்றனர்' என்கிறார் சிவப்பிரகாசர்.

" வேதம் ஓதின் விழி நீர் பெருக்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவாசக மிங்கொருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடு மணற்கேணியிற் சுரந்து நீர்பாய
மெய்ம் மயிர் பொடிப்ப விதிர் விதிர்ப்பெய்தி
அன்பராகு நரன்றி
மன்பதை யுலகில் மற்றைய ரிலரே."

## பல்வேறு சிறப்புக்கள் :

பன்னிரண்டு திருமுறைகளையும் சைவர்களாகிய நாம் சிறப்பாகப் போற்றி வருகின்றோம். எனினும் மார்கழித் திருவாதிரைத் திருநாள் பத்து நாட்களிலும் திருமுறைகளைக் காப்பிட்டு திருவாசகத்தின் ஒரு பகுதியாகிய திருவெம்பாவையை மட்டும் ஓதப் பெறுவதால் திருவாசகம் தனிச் சிறப்புப் பெறுகிறது. இத்திருவெம்பாவையில் இறுதிப்பாடலில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற இறைவனது ஐந்தொழில் சிறப்பைத் தெளிவாக விளக்கியிருப்பதுபோல் ஏனைய திருமுறைகளில் காண இயலாது. இதுவும் ஒரு தனிச்சிறப்பாகும். திருவாசகத்தில் பெரும்பாலான பாடல்கள் இறைவனை முன்னிலைப்படுத்திப் பேசியிருப்பதும் இதன் தனிச்சிறப்பை எடுத்துக்காட்டும்.

## நான்கில் மூன்று :

வடமொழி ஐம்பத்தொரு எழுத்துக்களைக் கொண்டது. அதைப் போல் ஐம்பத்தொரு பகுதிகளைக்கொண்டதாக விளங்கு

வது திருவாசகம். தொடக்கத்தில் உள்ள நான்கு பாக்களால் சைவ சித்தாந்தத்தின் முடிபாகிய முப்பொருள் உண்மைவிளக்கப்படுகிறது. திருவாசகம் 'நமச்சிவாய வாஅழ்க' என்ற பாடலில் தூல பஞ்சாட்சரத்தை முதலில்கொண்டு இருப்பது வேறு எந்நூலுக்கும் இல்லாத தனிச் சிறப்பாகும். முதலிலுள்ள கலி வெண்பாவால் இயன்ற பகுதி சிவபுராணம் என்று எல்லா நூல்களிலும் தலைப்பிடப்பட்டிருக்கிறது. சிவனது அநாதி முறைமையான பழமை என்று இதற்குப் பொருள் கூறுவர். இதில் பரம் பொருளின் உண்மையும் பழமையும் தெளிவாக விளக்கப்படுகிறது. பரம் பொருளுக்கு ஒரு பாடல் கூறுமல் இரண்டு பாடல்களால் சொல்லியுள்ளார் மணிவாசகர். முதற் பாடலில் பரம்பொருளின் உண்மையையும் பெருமையையும் பேசிய அவர் இரண்டாவதாக உள்ள நிலை மண்டில ஆசிரியப்பாவால் இயன்ற கீர்த்தித் திருவகவலில் சிவனது திருவருட் புகழ்ச்சி முறைமையை விளக்கியுள்ளார். மூன்ருவதாக இணைக்குறள் ஆசிரியப் பாவால் இயன்ற திருவண்டப் பகுதியில் சிவனது தூல சூக்குமத்தை வியந்து போற்றியுள்ளார். அண்டம் - உலகம். பிண்டம் - உடல். உலகத் தோற்றத்தை தூலம் சூக்குமம் என்று குறிப்பிட்டுப், பரந்து, விரிந்து கிடக்கும் அண்டப் பகுதியைச் சொல்லியுள்ளார். இது பாசம் பற்றிக் கூறுவது. ஆதலின் இதில் உலகத்தைப் பற்றிய விவரங்களையெல்லாம் அறிவித்துள்ளார். அடுத்து, நிலைமண்டில ஆசிரியப் பாவால் இயன்ற போற்றித் திருவகவலில் சகத்தின் உற்பத்தியைக் கூறுமுகத்தான் உயிரின் பிறப்பு வளர்ப்பு வரலாற்றைத் தெள்ளத் தெளிய விளக்கியிருக்கின்ருர். இந் நான்கு பாடல்களாலும் முப்பொருள் உண்மையைத் தெளிய உணர்த்தி யிருப்பது அறிந்து மகிழத்தக்கது. எல்லா நூல்களிலும் பதி, பசு, பாசம் என்ற முறையில் இம் முப்பொருள்களும் கூறப்பட்டாலும் இந்நூலின் முதலில் பதியின் இலக்கணத்தையும், இரண்டாவதாகப் பாச இலக்கணத்தையும் மூன்ருவதாகப்பசு இலக்கணத்தையும் கூறியிருப்பது சிந்தித்தற்குரியது. இம்முறையையொட்டியே பதின் மூன்ரும் நூற்ருண்டில் அவதரித்த மெய்கண்டதேவ நாயஞரும் தமது சிவஞானபோத நூலில் பதி பாசம் பசு என்று கூறியிருப்பது அறிந்து மகிழத்தக்கது.

இத்தகு தனிச்சிறப்பு மிக்க திருவாசகப் பாடல்களை தமிழர்கள் ஒவ்வொருவரும் படித்து இம்மை, மறுமை நலங்களைப் பெற்றுச் சிறந்து வாழ செந்தமிழ்ச் சொக்கர் திருவருளைச் சிந்திக்கின்ரேம்.

வாழ்க உலகெலாம்

# கேள்வி பதில்

## கடவுள் வழிபாடு செய்துவரும் எனக்குத் துன்பங்கள் வருவது ஏன்?

உலகில் மக்கள் அடையும் இன்பத் துன்பங்களுக்குக் காரணம் அவரவர்களும் முற்பிறவிகளிற் செய்த நல்வினை தீவினைகளேயாகும். வினை என்பதற்குச் செயல் என்பது பொருள். நல்வினைகளின் பயன் - இன்பம். தீவினைகளின் பயன் - துன்பம். உயிர்கள் செய்த நல்வினை தீவினைகளின் பயனை அவ்வுயிர்கள்பாற் கூட்டுபவன் இறைவன். இறைவனிடம் பக்தி செய்வோரை வினைகள் துன்புறுத்துவதில்லை. நாம் செய்த வினைகளுக்கு ஏற்பச் சிறிதளவு அவ்வினைப்பயன்கள் நம்மைத் தாக்கினாலும் திருவருள் வலியால் அத்துன்பங்கள் நம்மைப் பாதியா.

" அல்லல் என்செய்யும் அருவினை என்செய்யும்
தொல்லை வல்வினைத் தொந்தம்தாம் என்செய்யும்
தில்லைமா நகர்ச் சிற்றம்ப லவனுர்க்கு
எல்லை யில்லதோர் அடிமைபூண் டேனுக்கே."

என்று கூறியருளும் திருநாவுக்கரசர் தேவாரம் சிவபக்தி உடையவர்களுக்குத் துன்பக்காலங்களில் ஏற்படத்தக்க மன உறுதியைத் தெரிவிக்கிறது. வினைப்பயன் நம்மைப் பாதியாமலிருத்தற்கு இறைவன் திருவடிகளையே பற்றுக்கோடாகக் கொள்ளுதல் வேண்டும்.

" அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்."

என்ற திருக்குறள் உலகில் நன்மை செய்வோர் தீமை உறுதற்கும் தீமை செய்வோர் நன்மை பெறுதற்கும் காரணம் யாதென நம்மை ஆராயச் செய்து விடை காணச்செய்கின்றது. " படும் " என்ற சொல்லுக்குத் தோன்றும் என்பது பொருள். உலகில் இவ்வாறு அறப்பயன்கள் மாறி நிகழ்தற்குக் காரணம் யாதென நாம் ஆராய்ந்தால் நம் உள்ளத்திலேயே ஒரு உண்மை தோன்றும். அவ்வுண்மையாவது, முற்பிறவிகளிற் செய்த வினைப்பயன்களே இப்பிறவியில் நாம் அடையும் நன்மை தீமைகளுக்குக் காரணம் என்பதாகும்.

"தாம் தாம் முன் செய்த வினை தாமே அனுபவிப்பார், பூந்தாமரையோன் பொறிவழியே" என்பது ஔவையார் அருளிய நல்வழி. நமக்கு வரும் நல்வினை தீவினைகள் நாம் முன்செய்த வினைகளுக்கு ஈடாகக் கடவுளால் கொடுக்கப்படுவன என்ற எண்ணம் வந்துவிட்டாலே துன்பச் சுமை குறைவதை உணரலாம்.

சைவ சமய நாயன்மார்கள் வரலாற்றில் இவ்வுண்மையை நாம் நன்கு உணரலாம். இளையான்குடிமாறர் குங்குலியக்கலயர் போன்றவர்கள்தம் வாழ்க்கையில் விளைந்த இன்னல்கள் பல. ஆனால் அவ்வின்னல்கள் அவர்கள் மன உறுதியைப் பாதிக்கவில்லை. அவர்கள் அவற்றைத் துன்பங்களாகக் கருதாது தம் கடமைகளைச் செய்து திருவருள் பெற்றுள்ளனர். தாங்கள் மேற்கொண்ட குறிக்கோளில் அவர்கள் கவனமிருந்த காரணத்தினால் துன்பங்கள் அவர்களைத் தாக்கவில்லை. துன்பக் காலத்தும் தொண்டு செய்த பெருமை அவர்கட்கு உண்டாயிற்று.

"இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்."

"இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்."

என்ற திருக்குறட்பாக்கள் நமக்கு நல்ல மனப்பக்குவத்தை உண்டாக்கவல்லனவாகும்.

கடவுள் வழிபாடு செய்வோர்க்குத் துன்பங்கள் வருதல் ஏன் என்ற கேள்விக்கு இக்கருத்துக்கள் விடையாக அமையலாம். இறைவன் திருவடிகளைப் பற்றுக் கோடாகக் கொண்டவர்க்கு "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்று கூறியருளும் அப்பர் திருமொழியை மனத்தில் கொண்டு "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்று அவ் விறைவன் மீது நம் பாரத்தைப் போட்டுவிட்டு நம்பிக்கையோடு மனந்தளராமல் நல்லறங்கள் பலவும் செய்து வாழ்ந்துவரல் வேண்டும்.

"தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றலரிது."

என்ற குறளை அழுத்தமாக மனத்தில் பதியவைத்து வாழ்ந்து வந்தால் மன உறுதி இல்லாதார்க்கும் மன உறுதி உண்டாகும். இறைவன் திருவருள் எல்லா நலங்களையும் தரும்.

# தையல்நாயகி தெய்வமானுள்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை யாதீனத்திற்குச் சொந்தமான வேளூர், ஸ்ரீதையல்நாயகியம்மை உடனுகிய ஸ்ரீ வைத்திய நாத சுவாமி திருக்கோயிலுக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் அருளாட்சிக்காலத்தில் 5—5—1947 இல் யானை வாங்கப்பெற்றது. மலபாரிலுள்ள நிலம்பூரிலிருந்து வாங்கப்பெற்ற யானைக்கு "தையல்நாயகி" என்று பெயரிட்டு அதனைக் திருக்கோயிலுக்குப் பணிசெய்ய விட்டார்கள். மிகப் புத்திசாலியான இந்த யானை உற்சவ நாட்களில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளுதற்கு வசதியாகக் கூட்டத்தினரைத் துதிக்கையால் ஒதுக்கி வழிவிடச் செய்யும். அதுமட்டுமில்லாமல் முக்கியமானவர்கள் திருக்கோயிலுக்கு வரும்போது மலர்மாலை சூட்டியும் வரவேற்கும்.

இன்னும் விசேடமான செயல் என்னவென்றுல் பங்குனி மாதப் பிரமோற்சவ விழாவில் சந்நிதியிலிருந்து நரியோட்டம் என்ற நிகழ்ச்சி நடைபெறும். அப்போது நாதஸ்வரக்காரர்கள் 'மல்லாரி' வாசித்தவுடன் தானும் ஓட ஆரம்பித்துவிடும். இதனை யாரும் நிறுத்த முடியாது. உற்சவம் நடைபெறும் நாட்களில் திருவீதியுலாவிற்குப் பின்னர் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரப் பெருமான் திருக்கோயிலுக்குள் எழுந்தருளும்போது பாகன் துணையின்றித் தானே வெண்சாமரம் வீசி வலம்வரும் காட்சி இன்னும் கண்களை விட்டு நீங்காக் காட்சியாகும்.

பூம்புகாரில் 1973 ஏப்ரலில் நடைபெற்ற இந்திரவிழாவில் இந்தத் தையல்நாயகிதான் கரிகாலனின் சிலையை அம்பாரியில் சுமந்து விழாவிற்குப் பெருமை கூட்டியது.

6 வயதில் வந்த யானை 30 ஆண்டுகள் திருக்கோயில் சேவையில் ஈடுபட்டுத் தானும் மகிழ்ந்து, மக்களையும் மகிழ்வித்தது.

16—6—77 வியாழன் விடியற்காலம் கீழே விழுந்தது. பின் எழவே இல்லை. கொட்டகையைவிட்டு மெல்ல மெல்ல வெளியில் வந்து அம்பாளின் நிவேதனமான சர்க்கரைப் பொங்கலைக் கடைசியாக உண்டபின்னர், படுத்தபடியே இருந்தது. மருத்துவ உதவியளித்தும் உயிர்ப்பிக்க முடியாத நிலையில் மதியம் 12-00 மணியளவில் தெய்வமாக ஆகிவிட்டது.

அந்த யானையை நான்கு ரதவீதிகளிலும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானமவர்கள் உத்திரவுப்படி ஊர்வலமாக நாதசுர இன்னிசை முதலியவற்றுடன் எடுத்துச் சென்றனர். பின்னர் திருக்கோயிலுக்கு மேற்கே கிழக்கு நோக்கியிருக்குமாறு சமாதி வைக்கப்பெற்றது. நாள்தோறும் திருக்கோயிலில் கஜ பூஜைக்குச் செல்லும்பொழுது காலை மடக்கி துதிக்கையை உயர்த்தி சந்நிதிகளில் வழிபட்டுச் செல்லும் வழக்கமுடைய இந்த யானை மண்ணுள் தள்ளப்படும்பொழுதும் யாருடைய முயற்சியும் இல்லாமல் கால்களை மடக்கி வணக்கம்செய்யும் முறையில் வீழ்ந்தது வியப்பாயிருந்தது. இந்நிகழ்ச்சிகளைத் திரளான மக்கள் வந்து கண்டு சென்றனர். சமாதி வைக்கப்பெற்ற யானையின் நினைவை மனத்திலிருந்து மறக்க முடியாமல் மக்கள் திரும்பிச் சென்றனர்.

---

சிறுவர்களுக்கு:

## உங்கள் திறமைக்கோர் சோதனை !

( வி. சா. கு. )

## யானைகளும் வாயில்களும்

மிதிலாபுரி அரசனுடைய கோட்டை மதில்கள் 10. முதல் மதிலுக்கு வாயில் 1. இரண்டாவது மதிலுக்கு வாயில் 2. இவ்வாறு முறையே பத்தாவது மதிலுக்கு வாயில்கள் 10.

அவ்வரசனுடைய யானைகள் நீரருந்த இப்பத்து மதில்களின் வாயில்கள் வழியாகச் செல்கின்றன. ஒவ்வொரு மதிலிலும் உள்ள எல்லா வாயில்களின் வழியாகவும் ஒரே எண்ணிக்கையுள்ள யானைகள் செல்லவேண்டும். அப்படியானால் அம்மன்னனிடம் குறைந்த பக்ஷம் எத்தனை யானைகள் இருந்தன.

### இக்கணிதத்தின் மூலப்பாடல்

" பத்து மதிலுடையான் பார்வேந்தன் வாசலுக்கு
வைத்த மதில்டைவே வாசலுக்கு — அத்திநீர்
உண்ணப் போம்போதும் வரும்போதும் தான்சரியாய்
எண்ணுங்கள் ஏழாண் டிருந்து"

# திருவாசகத்தில் சைவ சித்தாந்தம்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L.,

**முன்னுரை :**

தமிழ் மொழிக்கண் உள்ள தலைசிறந்த சமய ஞானப் பக்திப் பெரும் பனுவல்களுள், திருவாசகம் மிக்க சிறப்புடையது என்பதை, நாம் அனைவரும் அறிவோம். அங்ஙனமே தமிழகத்தில் உள்ள சமய தத்துவக் கொள்கை வகைகளுள் ஒன்றாகச் சிறந்து திகழ்வது, சைவசித்தாந்தம் என்பதனையும், நாம் அனைவரும் நன்கறிவோம். ஆதலின், இங்குத் தனியாகத் திருவாசகம் பற்றியோ, சைவ சித்தாந்தம் பற்றியோ ஏதும் விரித்துரைக்க வேண்டுவதில்லை. மேற்கொள்ளப்பட்டுள்ள தலைப்பிற்கு ஏற்ப சைவ சித்தாந்தக் கொள்கைகள் உருவாகி வரையறை பெறுவதற்குத் திருவாசகம் எவ்வாறு துணைபுரிந்துள்ளது, திருவாசகத்திற் காணப்பெறும் குறிப்புக்கள், சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர்களால் எவ்வாறு நுண்ணிதின் உணர்ந்து போற்றிக் கொள்ளப்பட்டுள்ளன என்பதனை மட்டும், இயன்றவரை இங்கு ஒரு சிறிது ஆராய்ந்தறிய முயலுவோமாக !

**கவிதையும் தத்துவமும் :**

கவிதைக்கும் தத்துவத்திற்கும் மிக மிக நெருங்கிய தொடர்பு உண்டு. மனித வாழ்க்கை படிப்படியே முன்னேறி, வளர்ந்து சிறந்து ஓங்குவதன் மூலம், நாகரிகம் தழைக்கின்றது: நாகரிகத்தின் செழிப்பும் சிறப்புமே, பண்பாடாக மலர்கின்றன. வாழ்க்கையின் வளமும், பண்பாட்டின் மாட்சிமையும், வளர்ந்து ஓங்குந்தோறும், சிறந்த கவிதைகள் தோன்றுகின்றன. கவிதைகள் பல்கிப் பெருகுவதனால் இலக்கியங்கள் தோன்றுகின்றன. இலக்கியங்களின் பிழிவும் சாரமுமாக ஒருங்கு திரண்டு உருவாகும் அறிவு அனுபவக் கொள்கைகளே, தத்துவம் என்னும் பெயரால் வழங்கப்படுகின்றன.

எனவே கவிதைக்கும் தத்துவத்திற்கும் மிகமிக நெருங்கிய இயைபும் தொடர்பும் உண்டு எனலாம். " சிறந்த தத்துவ ஞானியாக இல்லாத எவனும் இதுவரையில் ஓர் உயர்ந்த கவிஞனாக

விளங்கியதில்லை " (" No man was ever yet a great poet, without at the same time being a profound philosopher " - S T. Coleridge ) என்பது, அறிஞர்கள் கண்ட முடிவு. ஆதலின் திருவாசகம் ஒரு சிறந்த கவிதை நூல் என்பது மட்டுமேயன்றி மிகச் சிறந்த ஒரு தத்துவ ஞான நூலும் ஆகும் என்று நாம் கூறுதல் பொருந்தும்.

சைவ சித்தாந்தம் என்னும் அரிய பெரிய தத்துவக் கொள்கையினை வகுத்து விளக்கிய நம்முடைய சைவப் பெருஞ் சான்றோர்கள், திருவாசகத்தை நன்றாக ஓதி உணர்ந்தவர்கள்; அதன்கண் பெரிதும் தோய்ந்து ஈடுபட்டுத் திளைத்தவர்கள். திருவாசகத்தின் ஒவ்வொரு சொல்லையும் சொற்றொடரையும், அவர்கள் பெரிதும் நுனித்து நுனித்து ஆராய்ந்துணர்ந்து, அவற்றின் அடிப்படையிலும் அவற்றிற்கு ஒரு சிறிதும் மாறாகாத வகையிலுமே, சைவ சித்ததந்தக் கொள்கைகளை வகுத்து வரையறை செய்திருக்கின்றனர் எனத் தெரிகின்றது.

சமய ஞானத் தத்துவக் கொள்கைகளில் தெளிவு ஏற்படாத பொழுதும், சிக்கல்கள் நேரும்பொழுதும், இன்னதுதான் ஏற்புடைத்து என்று எண்ணித் துணிந்து முடிவு செய்வதற்கு, நம் முன்னோர்கள் திருவாசகத்தினை ஒரு மேல்வரிச் சட்ட நூலாக மேற்கொண்டிருந்திருக்கின்றனர் எனச் சுருக்கமாகக் கூறலாம். இதனை விளக்க, ஒருசில சான்றுகளை மட்டும் இங்குக் காண்போம்.

(தொடரும்)

---

## யானைகளும் வாயில்களும் கணக்கின் விடை

( பக்கம் 3/0 சிறுவர் பகுதி )

விடை : 2520.

| | | |
|---|---|---|
| இரண்டு வாயில்களில் | | 1260×2=2520 |
| மூன்று | ,, | 840×3= ,, |
| நான்கு | ,, | 630×4= ,, |
| ஐந்து | ,, | 504×5= ,, |
| ஆறு | ,, | 420×6= ,, |
| ஏழு | ,, | 360×7= ,, |
| எட்டு | ,, | 315×8= ,, |
| ஒன்பது | ,, | 280×9= ,, |
| பத்து | ,, | 252×10= ,, |

# திருப்புறம்பயம் – திருவிசயமங்கை – திருவைகாவூர்த்

# தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர், வித்துவான்,

திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

சோழவள நாட்டில் காவிரியின் வடகரைத்தலங்களாக (46, 47, 48) விளங்கும் இம்மூன்று தலங்களும் கும்பகோணத்தை அடுத்துள்ளனவாகும். திருப்புறம்பயம் – புன்னைவனம் எனவும், திருவிசயமங்கை-புரசவனம் எனவும், திருவைகாவூர் - வில்வவனம் எனவும் பெயர்பெறும். திருப்புறம்பயம் - மூவர் தேவாரத் திருப்பதிகங்களைப்பெற்றது. திருவிசயமங்கை - ஞானசம்பந்தர் அப்பர் திருப்பதிகங்களைப் பெற்றது. திருவைகாவூர் - ஞானசம்பந்தர் பாடிய ஒரு திருப்பதிகத்தைக் கொண்டது.

திருவிசயமங்கை என வழங்கப்பெறும் தலங்கள் இரண்டு இருக்கின்றன. கொள்ளிடத்தின் வடகரையில் ஒன்றும் தென்கரையில் ஒன்றும் உள்ளன. இவற்றுள் தென்கரையில் உள்ள தலமே தேவாரத்தில் குறிக்கப்பெறும் கோவந்தபுத்தூர் விசயமங்கையாகும். கொள்ளிடத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டகாரணத்தால் ஞானசம்பந்தரும் அப்பரும் வடகரைத் திருவிசயமங்கையிலிருந்தே தென் கரைத் திருவிசயமங்கையைப் பாடியதாகக் கூறப்படுதலின் இரண்டு தலங்களிலும் ஸ்ரீலஸ்ரீ குருமணி அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர வழிபாடு நிகழ்கிறது.

**திருப்புறம்பயம் :**

புறத்தே நீர் சூழப்பெற்றது என்ற பொருளை உடைய இவ்வூர் கிழக்கே மண்ணியாறு வடக்கே கொள்ளிடம் தெற்கே காவிரி ஆகிய நதிகளை உடையதாய் நீர்வளம்

பொருந்திய நிலையில் விளங்குகின்றது. ஒருகாலத்தில் பிரளயம் வந்தபோது அவ்வெள்ளம் ஊரினுள் புகாது தடைப்பட்டுப் புறத்தே நின்றமையால் இப்பெயர் பெற்றது எனத் தலபுராணம் கூறுகிறது. அதற்கு ஏற்ப இவ்வூர்த் தல விநாயகர் பிரளயங்காத்த விநாயகர் எனப் பெயர் பெற்று விளங்குகின்ருர்.

'கங்கை நீர் புலமெலாம் மண்டிப் பொன் விளைக்கும் திருப்புறம்பயம்' எனவும் 'மடையெலாம் கழுநீர் மலர்ந்து மருங்கெலாம் கரும்பு ஆடத், தேன் புடையெலாம் மணநாறும் சோலைப் புறம்பயம்' எனவும் இத்தலத்தின் நீர் வளம் நில வளம் தேவாரத் திருப்பதிகங்களில் குறிப்பிடப்படுகின்றன.

இத்தலம் தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தாலூகாவில் விளங்குவது. கும்பகோணத்திற்கு வடமேற்கே 7 கிலோ மீட்டர் தூரத்தில் மண்ணியாற்றின் வடகரையில் உள்ளது. மதுரை ஸ்ரீ திருஞானசம்பந்தசுவாமிகள் ஆதீனத்தின் அருளாட்சியில் திகழ்வது.

சோழவள நாட்டில் காவிரியின் வடகரைத் தலங்களில் 46-வது தலமாக எண்ணப்பெறுவது. மூவர் தேவாரத் திருப்பதிகங்களையும் பெற்று விளங்கும் சிறப்புக்குரியது. திருவாசகத்திலும் இடம்பெற்றுத் திகழ்வது.

கும்பகோணத்திலிருந்து நகரப் பேருந்து வசதிகள் (டவுன் பஸ்) உள்ளன. குடந்தையிலிருந்து காவிரியின் வடகரை வழியாக சுவாமிமலை செல்லும் கற்சாலையில் 3 கி. மீட்டர் தூரம் சென்று புளியஞ்சேரி என்ற ஊரை அடைந்து அங்கிருந்து வடக்கே கொள்ளிடத்திற்குச் செல்லும் பாதையில் 5 கி. மீ. தூரம் சென்ருல் இத்தலத்தை அடையலாம்.

இத்தலத்திற்குத் தெற்கில் இன்னம்பரும், தென் கிழக்கில் சுவாமிமலையும், மேற்கில் திருவைகாவூரும், வட மேற்கில் திருவிசயமங்கையும், கிழக்கில் பெருமிழலைக் குறும்ப நாயனரின் மிழலையும் உள்ளன.

இத்தலத்திற்குக் கல்யாணமாநகர், புன்னுகவனம் என்னும் மறுபெயர்கள் உள்ளன.

## கோயிலமைப்பு :

ஊரின் நடுவில் திருக்கோயில் அமைந்துள்ளது. கிழக்கு நோக்கிய திருவாயிலை உடையது. திருக்கோயில்

கிழக்கு மேற்கில் 391 அடி நீளமும், தெற்கு வடக்கில் 232 அடி அகலமும் உடையது. இரண்டு பிராகாரங்கள் உள்ளன. அண்மையில் திருப்பணிசெய்யப்பெற்ற புதுப் பொலிவுடன் திகழும் ஐந்துநிலைக் கோபுரம் கோயிலுக்கு அணி செய்கிறது. கோயில் வாயிலில் தக்ஷிணாமூர்த்தி (அறமுரைத்த நாயனார்) கோயில் உள்ளது. 'நால்வர்க்கு அறம் பயன் உரைத்தனை புறம்பயம் அமர்ந்தோய்' என்று ஞானசம்பந்தரும் 'புறம்பயம் அதனில் அறம்பல அருளியும்' என்று மணிவாசகரும் இத்தலத்துத் தென்முகப் பெருமானைப் போற்றியுள்ளனர். இக்கோயிலின் பின்புறம் பிரமதீர்த்தம் உள்ளது.

இராஜகோபுரத்திற்குள் நுழைந்ததும் பஞ்சமூர்த்திகள் மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில் முருகனைக் கையில் ஏந்திய நிலையில் அம்பிகை திருவுருவம் விளங்குகிறது. குகாம்பாள் என்பது இவ்வம்மையின் திருப்பெயர். சுவாமி சந்நிதியில் விநாயகர், நந்தி, பலிபீடம், கொடிமரம் உள்ளன. செட்டிப்பெண் திருமணத்திற்குச் சான்றுகளாக விளங்கிய வன்னியும் கிணறும் மடைப்பள்ளியும் முதற்பிராகாரத்தில் உள்ளன.

முன் மண்டபத்தில் அம்பிகை திருக்கோயில் திகழ்கிறது. தெற்குநோக்கிய சந்நிதி இம்மண்டபத்தில் திருப்பதிகக் கல்வெட்டுக்கள் அமைக்கப்பெற்றுள்ளன.

இரண்டாம் கோபுர வாயிலைக் கடந்தவுடன் மகா மண்டபத்தை அடையலாம். இரண்டாம் பிராகாரம் திருமாளிகைப் பத்தியோடு அமைந்துள்ளது. இப் பிராகாரத்தில் சைவ சமயாசாரியராகிய நால்வர் திருக் கோயில் உள்ளது. மேலைத்திருச் சுற்றில் விநாயகர், சோமாஸ்கந்தர், முருகன், அகத்தியர், புலத்தியர், சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர், விசுவாமித்திரர் வழி பட்ட இலிங்கங்கள் உள்ளன. கோஷ்டங்களில் தக்ஷிணா மூர்த்தி, இலிங்கோற்பவர், பிர்மா, துர்க்கை ஆகியோர் எழுந் தருளி விளங்குகின்றனர் வடமேற்கில் தலமரம் புன்னை உள்ளது. கீழைத்திருச்சுற்றில் நடராஜர் சந்நிதி, நவக் கிரகம் பைரவர் சந்நிதிகள் உள்ளன.

மகாமண்டபத்தைக் கடந்து உள்ளே சென்றால் அர்த்த மண்டபத்தை அடையலாம். இம்மண்டபத்தின் தென் கிழக்கில் பிரளயங்காத்த பிள்ளையார் விளங்குகின்றார்.

சந்தன நிறம் பொருந்திய ஒருவகைக் கல்லால் இத்திருவுருவம் அமைந்துள்ளது. சுயம்புமூர்த்தி. திருமேனியில் சங்கும் இப்பியும் காணப்படுகின்றன. இம்மூர்த்தியை வருணன் தாபித்து வழிபட்டதாகத் தலபுராணம் கூறுகிறது. பிரளய காலத்தில் இவ்வூர் அழியாதவாறு காத்தவர் இவ்விநாயகர். விநாயக சதுர்த்தியில் ஒரு ஆடம் தேன்மட்டும் அபிடேகம் செய்யப்பெறுகிறது. அர்த்த மண்டபத்தில் உற்சவ விக்கிரகங்கள் பாதுகாப்பாக எழுந்தருளுவிக்கப் பெற்றுள்ளன. மூலத்தானத்தில் விநாயகர் துவாரபாலகர்களோடு அருள்மிகு சாட்சிநாதர் விளங்குகின்றார். வணிகப் பெண்ணின் திருமண நிகழ்ச்சிபற்றி மதுரை மாநகரில் சாட்சி கூறி அப்பெண்ணின் துன்பம் நீக்கிய காரணத்தினால் சாட்சிநாதர் எனவும் சாட்சிசுவரர் எனவும் வழங்கப்பெறுகிறார். கல்வெட்டுக்களில், திருப்புறம்பய முடைய – நாயனார், மகாதேவர், பட்டாலகர் தம்பிரானார் எனக் குறிப்பிடப்படுகிறார். அம்மை பெயர் – அருள்மிகு கரும்படுசொல்லியம்மை என்பதாகும். திருஞானசம்பந்தர் திருப்பதிகத்தில்

"பெரும்பிணி பிறப்பினொடு இறப்பிலையொர் பாகம்
கரும்பொடு படுஞ்சொலின் மடந்தையை மகிழ்ந்தோய்
சுரும்புண அரும்பவிழ் திருந்திபெழு கொன்றை
விரும்பினை புறம்பயம் அமர்ந்த இறையோனே"

எனக் குறிப்பிட்டுரைப்பதைக் காணலாம். இறைவனை வழிபட்டு அம்மை சந்நிதியை அடைந்து வழிபட்டு அருள் நலம் பெற்ற நிறைவைப்பெறலாம்.

## மூர்த்திகள் :

சுவாமி பெயர் ஸ்ரீ சாட்சி நாதர், அம்பிகை பெயர் ஸ்ரீ கரும்படு சொல்லியம்மை. தலமரம் - புன்னை. தீர்த்தம் - பிரம தீர்த்தம். சத்தசாகர தீர்த்தம் (கிணறு) கிழக்கே மண்ணியாறு. வடக்கே கொள்ளிடம்.

## தலப்பெருமை :

இராகு அந்தரத்தில் நிகழ்ந்த ஒரு பிரளயம் சிவபெருமான் ஆணைப்படி விநாயகரால் அடக்கப்பெற்றது. அப்போது வருணன் கடல் படுபொருள்களைக்கொண்டு அவ்விநாயகரை வழிபட்டுத் தன்குற்றம் நீங்கப்பெற்றான்.

மகத நாட்டு மன்னன் அரித்துவசன் துர்வாச முனிவர் சாபத்தினால் முயலக நோயுற்றுப் பெருந்துன்பம் எய்தி இறுதியில் புறம்பயத்திறைவனை வழிபட்டு அந்நோய் நீங்கப்பெற்றான்.

புறம்பயத்திறைவன் பிரம தீர்த்தக் கரையில் தென் முகம் நோக்கி ஆலின்கீழ் எழுந்தருளி சனகர் முதலிய நால்வர்க்கும் அக்கினிதபசு என்ற முனிவர்க்கும் மெய்ப்பொருள் உணர்த்தியருளினார்.

நாள்தோறும் திருக்கோயிலுக்கு விறகு கொணர்ந்த கோவந்தபுத்தூர்ப் புலைஞர்குல அன்பர் ஒருவர்க்கு இறைவன் வீடுபேறு அளித்தருளினான்.

ஆதனூரில் இருந்த தன் காதலன்பால்சென்ற கோயிற் பணி மகள் ஒருத்தியின் அணிகலன்களைக் கவர்ந்து கொண்டு அவளை மண்ணியாற்றில் தள்ளிய கொடியோனும் தவறி அவ்வாற்றில் வீழ்ந்து இறக்கவே அவ்விருவர்க்கும் இறைவன் நற்கதியருளினான் என்பன தல வரலாறுகள்.

இமவான், விந்தாசல வேந்தன், துரோணர், விசுவாமித்திரர், சுக்கிரீவன் முதலியோர் வழிபட்டு அருள் பெற்றுள்ளனர்.

வன்னியும் கிணறும் மடைப்பள்ளியும் அழைத்தவரலாறு:

இவ்வரலாறு திருவிளையாடற் புராணங்களிலும் இத்தல புராணத்திலும் சிற்சில மாறுதல்களோடு இடம் பெற்றுள்ளது. காவிரிப்பூம்பட்டினத்தில் செல்வச் சிறப்புமிக்க வணிகன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒரு பெண் மட்டுமே பிறந்தாள். அவன் மணப்பருவ மடைந்த தன் மகளை மதுரையிலிருக்கும் தன் மருமகனுக்கே திருமணம் செய்து கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்தான். இம்முடிவினைப் பலரும் அறியச் செய்தான். சில நாளில் வணிகனும் அவன் மனைவியும் இறந்தனர். இச் செய்தியை மதுரையிலிருந்த மருமகன் அறிந்தான். முன்பே திருமணமாகியிருந்தும் தன் மாமன்மகளை மதுரைக்கு அழைத்துச் சென்று மணம் செய்து அவளையும் மனைவியாகக் கொள்ள விரும்பினான். பூம்புகாருக்கு வந்து பொருள்களை எடுத்துக் கொண்டு பெண்ணையும் அழைத்துக் கொண்டு மதுரையை நோக்கிப் புறப்பட்டான். வழியில் திருப்புறம்பயத்தில்

தங்கினன். அப்பொழுது வணிகன் பாம்புகடித்து மாண்டான். உடன்வந்த பெண் அழுது புலம்பினள். இறைவனருளால் வணிகன் உயிர்பெற்றெழுந்தான். அவ்விடத்திலேயே திருமணமும் செய்து கொண்டு செல்லுமாறு இறைவன் பலரித்தார். வன்னிமரம், கிணறு, மடைப்பள்ளி சான்ருகத் திருமணம் நிகழ்ந்தது. பிறகு அவர்கள் மதுரையை அடைந்தார்கள். வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்த வணிகர்குடும்பத்தில்சக்களத்திப்போர்மூண்டது. மூத்தவள் இளையவளாகிய பூம்புகார்ப் பெண்ணை ஏசினள். நீ என் கணவனுடன் ஓடிவந்த காதற் பரத்தை என்று வசை கூறினள். திருமணம் செய்துகொண்டதற்குச் சாட்சி உண்டா என்று கேட்டாள். இளையவள் திருப்புறம்பயத்து வன்னி கிணறு மடைப்பள்ளிகளே சாட்சி என்ருள். மூத்தவள் நகைத்து அவைகளை இங்கே அழை பார்க்கலாம் என்ருள். இளையவள் மதுரைப் பெருமானை வேண்டினள். அவை கோயிலின் ஒரு புறத்தே வந்து தோன்றின. இளையவள் மூத்தவளுக்குக் காட்டினள். ஊரும் உலகமும் இளையாளைப் பாராட்டின. கணவன் மூத்தவளைத் தள்ளிவைத்தான். இளையவள் கணவனைவேண்டி மூத்தவளின் குற்றங்களைப் பொறுக்குமாறு வேண்டினள். பின் இருவரும் வணிகனேடு ஒற்றுமையாய் வாழ்ந்தனர்.

## இத்தலத்தைப் பற்றிய நூல்கள் :

ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவர் தேவாரத் திருப்பதிகங்கள் ஒவ்வொன்று இத்தலத்திற்கு உள்ளன. மணிவாசகர் 'புறம்பயமதனில் அறம்பல அருளியும்' எனக் கீர்த்தித் திருவகவலில் இத்தலத்தைக் குறிப்பிடுகின்ருர். பட்டினத்தார் திருவேகம்பமுடையார் திருவந்தாதியில் இத்தலத்தைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். சேக்கிழார் திருஞானசம்பந்தர் புராணத்திலும் ஏயர்கோன் கலிக்காமர் புராணத்திலும் சுந்தரர் வரலாற்றிலும் இத்தலத்தைக் குறித்துள்ளார். திருவிளையாடற் புராணம், சோமேசர் முதுமொழி வெண்பா தில்லைக்கலம்பகம் ஆகிய நூல்களில் இத்தலத்தைப்பற்றிய பாடல்கள் உள்ளன. வடமொழியிலும் தமிழிலும் தலபுராணங்கள் உள்ளன.

## கல்வெட்டு :

( கல்வெட்டு ஆராய்ச்சிக் கலைஞர், வித்துவான். திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள் எழுதி வெளியிட்டது. )

இந்தக்கோயிலிலே 11 கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டுள்ளன. எல்லாம் சோழர் கல்வெட்டுக்களே. இராசகேசரி வர்மன் முதல், குலோத்துங்கன்வரை. (அதாவது கி. பி. 10—11) நிலதானங்கள், விளக்குகளுக்காக நிலதானம், பொன்தானம், விளக்குத்தானம், விளக்குக்காகப் பசு தானம் ஆடுதானம் முதலியன கூறப்பெற்றுள்ளன.

இராசகேசரிவர்மன் காலத்தில் ஆலய பண்டாரத்தில் பெற்ற மிச்சப்பொருளினால் பொன்னுபரணங்கள், வெள்ளிப் பாத்திரங்கள் செய்யப்பட்டன. இராசேந்திரன் காலத்தில் திருப் புறம்பயத்து ஆதித் தேசுவரருக்கு 10 விளக்குகளுக் காகப் பொன் தானம் செய்யப்பட்டது என்று கூறும் கல் வெட்டினால் இக்கோயிலின் மூர்த்தியின் பெயர் ஆதித் தேசுவரர் என்றும் இக்கோயிலை ஆதித்த சோழன் கட்டி யிருக்கலாம் என்றும் ஊகிக்கலாம். உதயேந்திரச் செப் பேட்டின்படி கங்க அரசன் பிருதிவிபதிக்கும் வரகுண பாண்டியனுக்கும் நடந்த போரில் கங்க அரசன் உயிர் நீத்தான். (South Indian Vol. II 381).

இந்நாட்டின் பெயர் இராஜேந்திர சிம்மவளநாட்டு அண்டாற்றுக் கூற்றம் என்றும் காணக்கிடக்கிறது.

இத்திருக்கோயிலில் முதலாம் பராந்தகன், இரண் டாம் ஆதித்தன், முதலாம் இராசராச சோழன், முதற் குலோத்துங்க சோழன், விக்கிரமசோழன், மூன்றும் இராச ராசசோழன், மூன்றும் இராசேந்திர சோழன் என்னும் பிற் காலச் சோழ மன்னர்களின் காலங்களில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் அறுபத்திரண்டும், விசயநகர வேந்த னாகிய விருபாட்சிராயன் காலத்துக் கல்வெட்டு ஒன்றும் ஆக அறுபத்து மூன்று கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

இவைகளுள் முதற் பராந்தகசோழன் காலத்துக் கல் வெட்டு, இக்கோயிலுக்கு ஆதித் தேச்சுரம் என்னும் பெயர் உண்மையைப் புலப்படுத்துகின்றது. கோயில் திருவிசைப் பாப்பதிகம் பாடிய முதல கண்டராதித்த சோழ தேவரது மனைவியாராகிய செம்பியன்மாதேவியார் புறம் பயத்து இறைவர் நீராடியருளுவதற்கு வெள்ளிக் கலசம் ஒன்றை அளித்துள்ளார். இரண்டாம் ஆதித்த சோழன் காலத்தில் இருமடி சோழப் பெரும்படையினர் நந்தவனத்தின் பொருட்டு ஆறுமா நிலம் விட்டுள்ளனர், வானவன் மூவேந்த வேளான் என்பான் இத்திருக்கோயிலில் அஷ்ட

பரிவார தேவர்களை எழுந்தருளுவித்து அவர்களுக்கு நாள் வழிபாட்டிற்கு நிபந்தங்கள் அளித்துள்ளான். பங்குனித் திருநாளுக்கும், திருவேட்டை விழாவிற்கும் திருவெள்ளறை நல்லூர் என்னும் ஊரில் முதற் குலோத்துங்கன் நிலம் அளித்துள்ளான். முடிகொண்ட சோழப் பல்லவரையன் முத்திறத்து அடிகளுக்கும் நாள் வழிபாட்டிற்கும் நிபந்தம் அளித்துள்ளான். மூன்றுங் குலோத்துங்க சோழன் காலத்தில் ஆலங்குடையான் அடிகள் புறம்பயனும், திருச்சிற்றம்பல முடையானும் ஆளுடைய நாயகர் கூத்தாடுந் தேவர், அவர்தம் பிராட்டியார், பிள்ளையார் முத்துமுளைக் கன்று, அறம்பயந்த பிள்ளையார் இவர்களுக்கு அமாவாசை தோறும் திருமஞ்சனம் ஆடி அருளுவதற்கும் திருவமுதுக்கும் நிலம் கொடுத்துள்ளதோடு இவ்வேந்தன் காலத்தில் வீதி விடங்க விழுப்பரையனும் அவன் தம்பி அகிலநாயக விழுப்பரையனும் மூன்றும் பிராகாரத்தில் முதல்கோபுர வாசலடியில் அறம் உரைத்த நாயனாரையும், முதற் பிராகாரத்தில் திருவலஞ்சுழி இறைவனையும், புற்றிடங் கொண்டாரையும் எழுந்தருளுவித்து, நாள்வழிபாட்டிற்கு நிலங்களையும் அளித்த செய்தியையும் அறியலாம். மூன்றும் இராசராச சோழன் காலத்தில் குந்தவை நல்லூர்ச்சபையார் புறம்பயத்து இறைவனுக்கு நிபந்தம் அளித்துள்ளனர். விஜயநகர வேந்தன் கல்வெட்டு மகா விழாவைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இவ்வூரில் ஆண்டார்கடியாபரணர் மடம் ஒன்று இருந்தது. தாமோதர விண்ணகரம் என்ற பெருமாள் கோயில் ஒன்று இருந்தது. இவை போன்ற பல செய்திகளை இவ்வூர்க்கல்வெட்டுக்களில் காணலாம்.

See the Annual reports on south Indian Epigraphy for the years 1897 — Numbers 323 - 357; 1932 — Numbers 146 - 151 South Indian Inscriptions Volume VI 18 - 32 and தமிழ்ப்பொழில்.

## திருவிசயமங்கை

இத்தலம் தஞ்சை மாவட்டம் கும்பகோணத்திற்கு வடமேற்கில் உள்ள திருவைகாவூருக்கு வடக்கே கொள்ளிடப் பேராற்றின் வடகரையில் உள்ளது. சுவாமி மலைக்கு மேற்கில் உள்ள அண்டக்குடி என்னும் ஊரிலிருந்தும் இவ்வூரை அடையலாம். கும்பகோணத்திலிருந்து திருப்புயம்பயத்திற்கு நகரப் பேருந்தில் வந்து கொள்ளிடத்தைக் கடந்து நடந்து செல்வதே எளிதான வழி.

வண்டிப்பாதை உள்ளது. அரியலூரிலிருந்து முட்டத்துப் பேருந்தில் இவ்வூருக்கு வரலாம். நேரே இவ்வூருக்குப் பஸ் வசதி இல்லை. எவ்வழியில் வந்தாலும் 5 கி. மீட்டர் தூரம் நடந்தே வரவேண்டும். உந்து வண்டிகளில் செல் வோர் ஜயங்கொண்டம் அரியலூர் வழியில் வந்து இவ் ஆரை அடையலாம்.

பாண்டுவின் மக்கள் பாண்டவர் எனப்பெறுவர். அவர் களுள் வில்லுக்கு வீரனும் விளங்கியவன் அருச்சுனன். இவன் சிறந்த சிவபக்தன். சிவபிரானிடம் பாசுபதாஸ்திரம் பெற்றவன். விசயன், பார்த்தன் முதலிய பெயர்கள் அருச்சுனனுக்குண்டு. விசயன் வழிபட்ட தலமாதலால் விசயமங்கை என இத்தலம் வழங்கப் பெறுகிறது. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திருக்குறுந்தொகையில்

“ பாண்டுவின்மகன் பார்த்தன் பணிசெய்து
வேண்டும் நல்வரங்கொள் விசயமங்கை ”

என இந்நிகழ்ச்சி குறிப்பிடப்படுவதைக் காணலாம். விசய மங்கை என்பது கோயிற் பெயர். ஊரின் பெயர் கோவந்த புத்தூர் என்பதாகும். பசு சிவலிங்கத் திருமேனியில் பாலைச் சொரிந்து வழிபட்ட காரணத்தினால் இப்பெயர் ஏற்பட்டது. திருஞானசம்பந்த சுவாமிகள், தேவாரத் திருப்பதிகத்துள்,

“ கோதனம் வழிபடக் குலவும் நான்மறை
வேதியர் தொழுதெழு விசய மங்கையே ”

என இவ்வரலாற்று நிகழ்ச்சியைக் குறித்து அருளிச் செய்துள்ளார். பசு பால்சொரிந்து வழிபட்டு அருள்பெற்ற ஐதிகத்தை உணர்த்தும் சுதைச்சிற்பம் இக்கோயிலின் மேற்குப் பிராகாரத்தில் உள்ளது. கோபுர வாயிலின் இருபுறமும் உள்ள கருங்கற் சுவரிலும் கோவழிபடும் இவ் ஐதிகம் பொறிக்கப்பெற்றுள்ளது.

இக்கோவந்தபுத்தூர் என்னும் பெயரை மக்கள் கோவிந்தபுத்தூர் எனவும் கோகறந்தபுத்தூர் எனவும் வழங்குகின்றனர். ஊரின் பெயர் கோவந்தபுத்தூர் என்ப தையும் கோயிலின் பெயர் விசயமங்கை என்பதையும் நந்திதேவர்க்கு அருள்செய்ததலம் என்பதையும் திருநாவுக் கரசு சுவாமிகள் அருளிய பின் வரும் திருக்குறுந்தொகைத் திருப்பாடலால் நன்கறியலாம்.

"கொள்ளிடக் கரைக் கோவந்தபுத்தூரில்
வெள்விடைக் கருள்செய் விசயமங்கை
உள்ளிடத்து உறைகின்ற உருத்திரன்
கிள்ளிடத் தலையற்றது அயனுக்கே."

என்னும் பாடல் இத்தலமே திருவிசயமங்கை என்பதை அறிய உதவும் திருப்பாடலாகவும் திகழ்கிறது.

கோயிலமைப்பு :

கோயில் கொள்ளிடத்தின் வடகரையில் அமைந்து விளங்குகிறது. எதிரே அர்ச்சுன தீர்த்தம். ஊர் கீழைக் கோவந்தபுத்தூர் எனவும் மேலைக்கோவந்தபுத்தூர்எனவும் வழங்குகிறது. கோயில் மேலைக் கோவந்தபுத்தூரில் உள்ளது. சின்னஞ்சிறிய கிராமம்.

கோயில் சிறிது பழுதடைந்து காணப்படுகிறது. கோபுரம் இல்லை. இராஜகோபுரம் சிதைந்து விட்டது. கோபுரவாயில் மிக்க அழகுடைய கற்றூண்களால் ஆக்கப் பட்டுள்ளது பசு சிவலிங்கத்திற்குப் பாலாட்டும் தலஐதீகச் சிற்பங்கள் கோபுர வாயிலில் கற்றூணில் செதுக்கப்பெற் றுள்ளன. இரண்டு பிராகாரங்கள் உள்ளன.

கோபுர வாயிலைக் கடந்தவுடன் முதற் பிராகாரத்தில் அம்பாள் கோயில் உள்ளது. விநாயகர் சந்நிதி இரண்டா வது வாயிலில் உள்ளது. அம்பாள் கோயிலை அடுத்து பஞ்சமூர்த்திகள் மண்டபம் உள்ளது. நந்தி பலிபீடத்தைக் கடந்து இரண்டாங்கட்டைக் கோபுர வாயிலைக் கடந்த வுடன் மகா மண்டபத்தை அடையலாம். இரண்டாவது தெற்குப் பிராகாரத்தில் தெற்கு நோக்கிப் பிரளயங்காத்த விநாயகர் விளங்குகின்றார். கர்ப்பக்கிருகக் கோஷ்டத்தில் தக்ஷிணமூர்த்தி எழுந்தருளியுள்ளார். தெற்குத் திரு மாளிகைப்பத்தி மண்டபத்தில் ஞானசம்பந்தர் சப்த கன்னியர் திருவுருவங்கள் உள்ளன. மேற்குப் பிராகாரத் தில் விநாயகர் பஞ்சமூர்த்திகளின் திருவுருவங்கள் விளங்கு கின்றன. பாலசுப்பிரமணியர் மகாலிங்கம் மகாலக்ஷ்மி திருவுருவங்களும் தல ஐதிகச் சிற்பங்களும் உள்ளன. இலிங்கோற்பவர் மேற்கு கோஷ்டத்தில் விளங்குகின்றார். வடக்குப் பிராகாரத்தில் முருகன் தெற்குநோக்கி எழுந் தருளியுள்ளார்.

விநாயகரும் முருகனும், வடகரையில் இருந்து பாடிய ஞானசம்பந்தருக்குக் காட்சி கொடுத்தற்பொருட்டுத் தெற்கு

நோக்கி எழுந்தருளியிருப்பதாகக் கூறப்படுகிறது. வடக்குப் பிராகாரத்தின் கோமுகையில் பிர்மா உள்ளார். அடுத்து இக்கோயிலில் விளங்கும் துர்க்கை திருவுருவம் மிகப் பழமையானது. சோழர்காலத் தொன்மையுடையது. மகா மண்டபத்தில் நடராஜா நந்திதேவர் கிராம தேவதைகளின் திருவுருவங்கள் உள்ளன.

நந்திதேவர் இத்தலத்திறைவனை வழிபட்டு அருள் பெற்ற வரலாற்றைத் திருநாவுக்கரசு சுவாமிகள்,

" வெள்விடைக்கு அருள்செய் விசயமங்கை
உள்ளிடத்து உறைகின்ற உருத்திரன் "

எனக் குறிப்பிடுகின்றார். நடராஜா சந்நிதிக்கு அருகில் நவக்கிரகங்கள், பைரவர், சூரியன் உள்ளனர்.

மூலஸ்தானத்தில் விநாயகர் துவார பாலகர் உருவங்கள் கருப்பக்கிருக வாயிலில் உள்ளன. சுவாமி சந்நிதியில் நம் மனம் இறைவன்பால் ஈடுபட்டுக் குவிகின்றது.

இறைவன் சந்நிதியை அடைந்தவுடன் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த திருக்குறுந் தொகைத் திருப்பாடல் நம் நினைவுக்கு வருகிறது.

" வந்து கேண்மின் மயல்தீர் மனிதர்காள்
வெந்த நீற்றன் விசயமங்கைப் பிரான்
சிந்தையால் நினை வார்களைச் சிக்கெனப்
பந்து வாக்கியுய்க் கொள்ளும் காண்மினே "

என்ற பாடலை ஓதி வழிபட்டு இறைவன் தமர் என்ற நினைவோடு அம்பிகை சந்நிதியை அடைந்து வழிபட்டு அருள் பெறலாம்.

மூர்த்திகள் :

சுவாமி பெயர் அருள்மிகு விசயநாதர். ஸ்ரீ கங்கா ஜடேசுவரர் என வழங்கப்பெறுகின்றார் அம்பாள் பெயர் அருள்மிகு மங்களநாயகி. இத்தலத்தில் உள்ள விநாயகர், முருகன், நந்திதேவர், (உற்சவர்) துர்க்கை திருவுருவங்கள் காணத்தக்கன.

தலமரம் - புரசு. தீர்த்தம் - அர்ச்சுன தீர்த்தம். கொள்ளிடம்.

தலப்பெருமை :

அருச்சுனன் வழிபட்டது : பாரதப் போரில் வெற்றி பெறுதற்காக அருச்சுனன் இறைவனிடம் பாசுபதக்கணை பெற விரும்பிக் காட்டுக்குச் சென்று கடுந்தவம் புரிந்தான். அருச்சுனன் தவத்தைக் கெடுக்க துரியோதனன் மூகாசுரனை அனுப்பினான். மூகாசுரன் பன்றி வடிவெடுத்து அருச்சுனனைக் கொல்ல வந்தான். சிவபெருமான் அருச்சுனனைக் காப்பாற்ற எண்ணினார். வேட வடிவோடு வெளிப்பட்டுப் பன்றியின் மீது ஒரு அம்பைச் செலுத்தினார். அருச்சுனனும் அப்பன்றியின் மீது கணையொன்றைச் செலுத்தினான். பன்றி மாண்டது. பன்றியைக் கொன்றது குறித்து இருவருக்கும் சொற்போரும், விற்போரும் மற்போரும் நிகழ்ந்தன. போரில் அருச்சுனனுடைய வில் முறிந்தது. அருச்சுனன் முறிந்த வில்லால் வேடன் முடி மீது அடித்தான். அவ்வடி எல்லா உயிர்களின் தலைமீதும் பட்டது. இறைவன் வெளிப்பட்டு அருச்சுனனுக்குப் பாசுபதக் கணை அளித்து அருள்செய்தான். அருச்சுனன் வழிபட்ட தலங்கள் பலவற்றுள் இதுவும் ஒன்றாக அருச்சுனன் பெயராலேயே வழங்கப்பெறுவதும்; இவ்வரலாற்று நிகழ்ச்சி தேவாரத் திருப்பதிகத்துள் சுட்டியுரைக்கப் பெறுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பசு ஒன்று நாடோறும் பால் சொரிந்து வழிபட்ட காரணத்தினால் இத்தலம் கோவந்தபுத்தூர் எனவும் கோகறந்தபுத்தூர் எனவும் வழங்கப்பெறுதல் அறியத்தக்கது. இவ்வரலாற்று ஐதிகம் சுதைச்சிற்பமாக மேற்குப் பிராகாரத்தில் உள்ளது. சப்தரிஷிகள் தரிசிக்க இறைவன் பசுவுக்குக் காட்சி கொடுப்பதும் அருச்சுனனுக்கு அருள் செய்வதும் சுதை உருவங்களில் உள்ளன. பசு பூசித்து அருள்பெற்ற நிகழ்ச்சி தேவாரத்தில் இடம்பெற்றுள்ளமை முன்னர்க் குறிப்பிடப் பெற்றுள்ளது.

ஞானசம்பந்தர் அப்பர் ஆகியோர் கொள்ளிட நதியின் வெள்ளப் பெருக்கின் காரணமாகத் தென்கரையில் உள்ள விசயமங்கையில் இறைவனை வழிபட்டு அங்கிருந்தே இத்தலத்து இறைவனைப் பாடினர் எனவும் அவர்களுக்குக் காட்சி கொடுத்தற் பொருட்டே விநாயகர் முருகன் ஆகியோர் தெற்கு நோக்கி உள்ளனர் எனவும் கூறப்படுகிறது.

## பிறிதொரு விசயமங்கை :

இத்தலம் கொள்ளிட நதியின் தென் கரையில் உள்ளது. இது விஷமுங்கி என வழங்கப்படுகிறது. சிறிய கோயில். கிழக்கு நோக்கிய சந்நிதி. ஒரே பிராகாரம். கட்டைக் கோபுரத்தைக்கடந்தவுடன் விநாயகர், நந்தி, பலிபீடங்கள், கோயிலுக்குள் நுழைந்தவுடன் மகாமண்டபம் சுவாமி சந்நிதியின் வாயிலில் விநாயகர் முருகன் திருவுருவங்கள் உள்ளன. மண்டபத்தில் விசாலாக்ஷி விசுவநாதர் நவக்கிரகங்கள் பைரவர் உருவங்கள் உள்ளன. அம்பாள் சந்நிதியும் இம்மண்டபத்தோடு இணைந்துள்ளது. பிராகாரத்தில் தக்ஷிணாமூர்த்தி சண்டேசுவரர் திருவுருவங்கள் உள்ளன. விநாயகர் முருகன் சோமாஸ்கந்தர் உற்சவ விக்கிரகங்கள் மண்டபத்தில் விளங்குகின்றன. மூர்த்திகள் - சுவாமி பெயர் ஸ்ரீ விசயநாதேசுவரர். அம்பாள் பெயர் ஸ்ரீ மங்கைநாயகி. கோயிலுக்கு எதிரே அருச்சுனதீர்த்தம் உள்ளது. இத்தலத்தைப் பாடிய விசயமங்கை எனல் பொருந்தும்.

பாடல்பெற்ற விசயமங்கை கொள்ளிடத்தின் வடகரையில் விளங்குவதேயாகும் என ஆராய்ச்சியாளர் கண்டறிந்துள்ளனர்.

## கல்வெட்டு :

இத்திருக்கோயிலில் மதுரைகொண்ட கோப்பரகேசரிவர்மன், பரகேசரிவர்மன், பரகேசரி உத்தம சோழன் முதலாம் இராசராச சோழன், முதலாம் இராசேந்திர சோழன், முதற் குலோத்துங்க சோழன் மூன்றாங் குலோத்துங்க சோழன், திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராச தேவன் இவர்கள் காலங்களில் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இக் கல்வெட்டுக்களில் இறைவர் விஜய மங்கல முடைய மகாதேவர், விஜய மங்கலத்து மகாதேவர், விஜயமங்கலமுடைய பரமசாமி என்னும் பெயர்களால் குறிக்கப்பெற்றுள்ளனர்.

இக்கோயில் விமானத்தைக் கல்லால்கட்டியவன்:- விசய மங்கலமுடைய பரமசாமிக்கு ஸ்ரீ விமானத்தைக் கல்லால் எழுந்தருளுவித்தவன் உடையார் மும்முடிச் சோழ தேவர் பெருந்தரத்து குவளாலமுடையான் அம்பலவன் பழுவூர் நக்கனான விக்கிரமசோழ மகாராஜன் ஆவன். (See the South Indian Inscriptions Volume XIII Thecholas. Num-

ber 76) பெருந்தரம் a nobleman 'இச் செய்தி முதலாம் இராசராசசோழனின் மூன்றுமாண்டுக் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது.

வழிபாடுகள்:- இக்கோயிலில் அர்த்த யாமம் உள்பட நான்கு போதுகளில் வழிபாடுகள் நடைபெற்று வந்தன. இவ்வழிபாட்டுக் காலங்களில் திருவமுதுக்கு அரிசிக்கும். பொரிக் கறியமுது, புழுக்கறியமுது ஆக கறியமுது இரண்டுக்கும் நெய்யமுது, தயிரமுது, இவைகளுக்கும், அடைக்காய் அமுது வெறுங்காய் இவைகளுக்கும், சந்தனம் சந்தனக் குழம்பு, கற்பூரம் இவைகளுக்கும், ஆடி அருளப் பாலுக்கும், ஆடைக்கும், நுந்தா விளக்குகள் ஐந்தினுக்கும் சிறுகாலை எட்டு, உச்சியம்போது எட்டு, இரவுக்குப் பதினைன்கு சந்திவிளக்குகளுக்கும் பிறவற்றிற்குமாக வடபிடாகை நெடுவாயிலிலும் இந்நெடுவாயிலைச் சுற்றிய பிடாகைகளிலும் உள்ள நிலங்களை நிவந்தங்களாக அம்பலவன் பழுவூர் நக்கனை ராஜராஜப் பல்லவரையன் அளித்திருந்தான்.

எழுந்தருளுவித்த திருமேனிகள் :- முதலாம் இராசராச சோழனின் ஏழாம் ஆண்டில் அம்பலவன் பழுவூர் நக்கனுகிய இராஜராஜப்பல்லவரையன் இத்திருக்கோயிலில் கூத்தப் பெருமானையும், உமாபட்டாலகியையும் எழுந்தருளுவித்தும் அவர்களுக்கு அணிகலன்களைக் கொடுத்துள்ளான்.

திருமடம் :- இவ்வூரில் திருத்தொண்டத் தொகையன் திருமடம் ஒன்று இருந்ததைத் திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராச தேவரின் 32 - ஆம் ஆண்டுக் கல்வெட்டு உணர்த்துகின்றது. இவ்வூர் முதலாம் இராசேந்திர சோழன் கல்வெட்டில், வடகரை இராசேந்திர சிங்கவள நாட்டுப் பெரிய வானவன் மாதேவி சதுர்வேதி மங்கலத்து விசயமங்கை என்றும், திரிபுவனச் சக்கரவர்த்தி மூன்றுங் குலோத்துங்க சோழன் கல்வெட்டில் விக்கிரம சோழவள நாட்டு இன்னம்பர் நாட்டு விசயமங்கை எனவும் குறிக்கப் பெற்றுள்ளது.

பிற செய்திகள் :- பெரியவானவன்மாதேவி சதுர்வேதி மங்கலத்தில் சபை ஒன்று இருந்தது. அச்சபையார்க்குப் பெருங்குறிப் பெருமக்கள் என்று பெயர். அவர்கள் கூட்டம் கூடுவதற்குமுன் தட்டழிகொட்டிக் காளம் ஊதச்செய்து நடுவில் ஸ்ரீ கோயிலான விஜயாபரண விண்ணகரப்

பெருமானடிகள் கோயிலின் முன்பில் கூட்டம் குறைவறக் கூடியிருந்து கோயில் காரியங்களைக் கவனித்துவந்தனர். இங்குள்ள கல்வெட்டு ஒன்று "வாழ்க அந்தணர்" என்று தொடங்கும் தேவாரப் பாடலுடன் தொடங்குகின்றது. இது பாராட்டற்குரியதாகும். இப்பாடலுக்கும் அச்சில் புத்தகத்தில் வெளிவந்த பாடலுக்கும் வேறுபாடு இல்லை

இக்கோயிலில் உள்ள முதலாம் இராசராச சோழனின் மூன்றுமாண்டுக் கல்வெட்டில் "இவ்வொட்டோலைப்படியே கல்லில் வெட்டவும் சாசனம் செய்வித்துக்கொள்ளவும் பெறுவார் ஆக ஒட்டி இறைகாவல் ஓட்டோலை இட்டுக் குடுத்தோம்" என்னும் தொடர்கள் காணப்படுகின்றன. இத்தொடர்களில் வரும் ஓட்டோலை என்பது இக்காலம் Agreement என்னும்பொருளில் இருப்பது நோக்கத்தக்கது.

See the Annual reports on south Indian Epigraply for the years 1929, Numbers. 157-194.

குறிப்பு:— கொள்ளிடப் பேராற்றின் தென்கரையில் திருவைகாவூர்க்குக் கிழக்கில் விசயமங்கை என்று ஓர் ஊர் இருக்கிறது. அங்கு ஒரு சிவன் கோயிலும் உண்டு. இதை விஜயமங்கை என்று கொண்டாரும் உண்டு. அது தவறாகும்.

## திருவைகாவூர்

இத்தலம் தஞ்சை மாவட்டம் கும்பகோணத்திற்கு வடமேற்கே 1 கி. மீட்டர் தூரத்தில் உள்ளது. கும்பகோணத்திலிருந்து இத்தலத்திற்குச் செல்ல நகரப் பேருந்து வசதிகள் உள்ளன. மண்ணியாற்றின் வடகரையில் கொள்ளிடப் பேராற்றின் தென்கரையில் விளங்கும் இத்தலம் சோழவள நாட்டுக் காவிரி வடகரைத் தலங்களில் 48வது தலமாகப் போற்றப்பெறுவது. ஞானசம்பந்தர் அருளிச் செய்த ஒரு திருப்பதிகத்தை உடையது.

### கோயிலமைப்பு:

ஊரின் நடுவில் கோயில் அமைந்துள்ளது. பேருந்துச் சாலையின் மேற்புறம் கோயில் கிழக்கு நோக்கிய சந்நிதியோடு திகழ்கிறது. (எதிரே எமதீர்த்தம்) ஆலய முகப்பு ஐந்து கலசங்களோடு விளங்கும் சிறு மண்டப வடிவில் உள்ளது, கோயிலின் வாயிலில் சித்தி விநாயகர் ஆலயம். கிழக்கு நோக்கிய சந்நிதி. ஆலய வாயிலைக் கடந்து

உள்ளே சென்றதும் பெரிய பிராகாரம். இப்பிராகாரத்தின் வடபுறம் சமயாசாரியர் திருக்கோயில் உள்ளது. ஆலய வாயிலில் நந்தி பலிபீடங்கள் உள்ளன.

இத்தலத்தில் நந்திதேவர் கோபுர வாயிலை நோக்கிய நிலையில் திரும்பியிருப்பது இத்தலத்தில் நிகழ்ந்த வரலாற்று ஐதிகத்தைக் குறிப்பதாகும். வேடனுயிரைக் கவர வந்த இயமனை நந்திதேவர் இறைவன் ஆணைப்படி தன் மூச்சுக் காற்றால்கட்டிய நிகழ்ச்சி தலவரலாற்றில் காணப்படுகிறது.

இரண்டாவது கோபுரம் ஐந்து நிலைகளோடு அழகுறத் திகழ்கிறது. கோபுரத்தின் நுழை வாயிலில் இத் தலத்தில் சிறப்பாக நிகழ்ந்த தலவரலாற்று ஐதிகச் சிற்பம் விளங்குகின்றது.

வேடன் ஒருவன் சிவராத்திரியன்று புலிக்குப் பயந்து வில்வ மரத்தில் ஏறித் தூக்கம் வராமலிருக்க வில்வ இலையைப் பறித்து ஒன்றொன்றாக அம்மரத்தினடியில் ஒரு சிவலிங்கத்தின் மீது இட்டு முத்தியடைந்த இத்தல வரலாற்று ஐதிகச் சிற்பம் கோபுர வாயிலில் உள்ளது.

இரண்டாவது பிராகாரத்தில் தலமரம் வில்வம் உள்ளது. வேதங்களே வில்வ மரங்களாக நின்று இத் தலத்தில் தவஞ் செய்வதாகத் தல புராணம் கூறுகிறது.

தலமரங்களை அடுத்து சப்த மாதாக்களின் கோயில் விளங்குகிறது. மேற்குப்பிராகாரத்தில் தெற்கு மூலையில் ஸ்ரீவல்லபை விநாயகர் கோயில் உள்ளது. அதை அடுத்து விளங்குவது முருகன் கோயில். அறுமுகச் செவ்வேளின் அழகிய கோலத்தை இங்குத் தரிசிக்கலாம். அருணகிரி நாதர் பாடிய திருப்புகழைப் பெற்றவர் இம்மூர்த்தி.

அடுத்து வடக்குப் பிராகாரத்தில் அம்பாள் கோயில் உள்ளது. ஸ்ரீ சர்வஜனரக்ஷகி என்ற பெயருக்கு ஏற்பத் தன்னை வழிபடும் அன்பர்கட்கெல்லாம் அருள் நலம் நல்கிடும் அன்னையாக அம்பிகை விளங்குகின்றார். அம்பிகை கோயில்வாயிலில் விநாயகர் எழுந்தருளியுள்ளார். அழகிய சிறிய திருவுருவம். அதை அடுத்து நடராஜ சபை.

கர்ப்பக்கிருகக் கோஷ்டங்களில் தெற்கே நர்த்தன விநாயகர், அகத்தியர், தக்ஷிணாமூர்த்தி, மேற்கே கஜ சம்காரமூர்த்தி இலிங்கோற்பவர் வடக்கே பிரமன் அர்த்த நாரீசுவரர் மகிஷாசுரமர்த்தனி துர்க்கை பைரவர் ஆகிய மூர்த்திகள் உள்ளனர்.

இத்திருக்கோயிலில் உள்ள பஞ்சமூர்த்திகள், பிர்மா, விஷ்ணு, நடராஜா, சிவகாமி அம்மை, வேடன் வேடத்தி முதலிய உலோகத் திருவுருவங்கள் அனைத்தும் கும்ப கோணம் ஸ்ரீ கும்பேசுவர சுவாமி கோயிலில் பாதுகாப்பின் பொருட்டு வைக்கப்பெற்றுள்ளன.

மகா மண்டபத்தின் வலப்புறத்தில் சப்த லிங்கங்கள் உள்ளன. சுவாமி சந்நிதியில் பிரமன், திருமால், விநாயகர், விஞதக்ஷிஞமூர்த்தி ஆகிய மூர்த்திகள் உள்ளனர். தக்ஷிஞ மூர்த்தி திருவுருவம் சிறிது சிதைந்துள்ளது.

சுவாமி சந்நிதியில் துவார பாலகர் திருவுருவங்கள் இல்லை. வேடனுயிரைக் கவர வந்த இயமனை வெருட்ட இறைவன் துவாரபாலகர்களை ஏவிய காரணத்திஞல் இத்தலத்தில் துவாரபாலகர்கள் இல்லை. சுவாமி சந்நிதி நம் மனத்தைக் கவர்கிறது. வேடனுக்கும் அருள்செய்த வில்வவனேசரின் எளிவந்த கருணையை எண்ணி நம் மனம் நைகின்றது. தன்பால் அன்புள்ள அடியார்கள் எவ்வாறு பாடி ஏத்திஞ லும் மனம் மிக மகிழ்பவர் வைகாவூர் இறைவன் என்று ஞானசம்பந்தர் பாடியருளிய தேவாரம் நம் நினைவுக்கு வருகின்றது.

"கோழைமிட ருககவி கோளும்இல
வாக இசை கூடும்வகையால்
ஏழை அடி யாரவர்கள் யாவர்சொன
சொல்மகிழும் ஈசனிடமாம்
தாழை இள நீர்முதிய காய்கமுகின்
விழநிரை தாறுசிதறி
வாழைஉதிர் விழ்கனிகள் ஊறிவயல்
சேறுசெயும் வைகாவிலே"

என்று ஞானசம்பந்தர் ஓதியருளிய தேவாரத் திருப்பாடலை நாமும் ஓதி வழிபட்டு மீள்வோம்.

அம்பிகை இறைவனுக்கு இடது பாகத்தில் விளங்கு வது இத்தலத்தின் சிறப்புக்களில் ஒன்ருகும். அம்பாள் கோயிலும் கிழக்கு நோக்கிய சந்நிதியாகும். நந்திகள் எல்லாம் கிழக்குநோக்கியே உள்ளன. அம்பாள் சந்நிதி மிக்க அழகோடு திகழ்கிறது.

தலப்பெருமை :

மகாசிவராத்திரி விழாவைச் சிறப்பாகக் கொண்ட திருக்கோகர்ணம் திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்) திருக்காளத்தி முதலிய தலங்களுள் திருவைகாவூரும் ஒன்றாகும்.

இத்தலம் முற்காலத்தில் வில்வக்காடாக விளங்கியது. தவநிதி என்ற முனிவர் இக்காட்டில் தங்கித் தவமியற்றி வந்தார். ஒருநாள் வேடன் ஒருவன் ஒரு மானைத்துரத்திக் கொண்டுஓடிவந்தான். மான் முனிவரைத் தஞ்சமடைந்தது; முனிவர் அதற்கு அபயமளித்தார், வேடன் முனிவரைத் தாக்க முற்பட்டான். உடனே சிவபெருமான் புலி வடிவெடுத்து வேடனைத் துரத்தினார். வேடன் பயந்தோடி அருகிலிருந்த வில்வமரமொன்றில் ஏறினான், புலி மரத்தடியிலேயே நின்றது. வேடன் வேறுவழியின்றி மரத்தின் மேலேயே இருந்தான். இரவுப்போதும் வந்தது. அன்றைய நாள் முழுதும் உண்ண முடியவில்லை. களைப்பு மிகுதியால் இராப்போதில் உறக்கம் வந்துவிடுமோ என்று அஞ்சிய வேடன் வில்வமரத்தின் இலைகளை ஒவ்வொன்றாகப்பறித்துக் கீழே போட்டுக்கொண்டிருந்தான். அன்று சிவராத்திரி. வில்வமரத்தின் கீழே ஒரு சிவலிங்கம் இருந்தது. வேடன் பறித்துப்போட்ட வில்வ இலைகள் சிவலிங்கத்தின்மேல் விழுந்தன. சிவராத்திரியில் ஊண் உறக்கமின்றி இறைவனை வழிபட்ட சிவபுண்ணியம் வேடனுக்கு அவனை அறியாமலே அபுத்தி பூர்வமாகக் கிடைத்தது.

அன்றைய பொழுதோடு வேடனின் ஆயுட்காலம் முடிவதாக இருந்தது. இயமன் வேடன் உயிரைக் கவர வந்தான், நந்திதேவர் அவனைப்பொருட்படுத்தாமலிருந்து விட்டார். சிவபிரான் தன்னடியவன் உயிரைக் கவர வந்த இயமனைக் கையில்கோல்கொண்டுவெருட்டினார். இயமன் அஞ்சிஓடினான். இயமனைப் பிடித்துவருமாறு துவாரபாலகர்களை ஏவினார். கோயிலுக்குள் இயமனை அனுமதித்த குற்றத்திற்காக நந்திதேவரைச் சினந்தார். நந்திதேவர் திரும்பி தன் மூச்சுக் காற்றால் இயமனைக் கட்டி நிறுத்தினார். பின் அவனது வேண்டுகோளுக்கு இரங்கிய இறைவன் இயமனை விடுவிக்குமாறு நந்திதேவருக்குக் கட்டளையிட்டார். இயமன் விடுதலை பெற்றான்.

இயமன் சிவனடியார் உயிரைக் கவர்ந்த குற்றத்திற்கு மன்னிப்பு வேண்டித் தன்பெயரால் தீர்த்தமுண்டாக்கி

அதில் நீராடி வில்வவனேசுவரரை வழிபட்டு அருள் பெற்றான்.

இறைவன் சிவராத்திரியில் வில்வார்ச்சனை செய்து வழி பட்ட வேடனுக்குக் காட்சியளித்து வீடுபேறருளினார். இவ் வாலாற்று ஐதிக விழா சிவராத்திரியில் ஆண்டுதோறும் நிகழ்ந்து வருகிறது. தலபுராணங்களில் பின்வரும் வரலாற்றுச் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

பூமிதேவி வழிபாடு:

இறைவன் உமையம்மையோடு கயிலைமால்வரையிலிருந்து காவிரி நாட்டிற்கு எழுந்தருளி வரும்போது இத்தலத்தின் எழிலையும் வனத்தையும் கண்டு இங்கே எழுந்தருளினார், இதனை உணர்ந்த பூமிதேவி இத்தலத்தில் அவரை வணங்கி அருள் பெற்றாள். இதனால் இத்தலத்திற்குப் பூமிபுரம் எனப் பெயர் உண்டாயிற்று.

வில்வவடிவில் வேதங்கள் :

ஊழிக்காலத்திலும் அழியாத வரம்பெற விரும்பிய வேதங்கள் இறைவன் ஆணைப்படி இத்தலத்தில் வில்வ மரங்களாய் நின்று தவம் புரிய, இறைவன் அவ்வேதங் களுக்கு அழியா வரமருளினான் என்பது இத்தலபுராணத் தில் கூறப்பெறும் வரலாறாகும்.

சில செய்திகள் :

சிவராத்திரியன்று கள்வன் ஒருவனால் கொலையுண்ட அடியார் ஒருவரின் குழந்தையை உயிர்ப்பித்தருளிய காரணத்தினால் இத்தல இறைவன் மகவருளீசன் எனப் பெற்றார். அக்னிதேவன் இறைவனை வழிபட்டு தேயும் தன்மை நீங்கப் பெற்றான். பிரமன் வழிபாடு செய்து படைப்புத் தொழில் கைவரப்பெற்றான். திருமால் கற்பரசி ஒருத்தியின் சாப நீக்கத்திற்கு இத்தலத்தில் தங்கித் தவம் செய்து சாப விமோசனம் பெற்றார். இதனால் சுவாமி அரியீசர் எனப் பெயர் பெற்றார். உந்தல முனிவர் சப்த கன்னியர் முதலானோர் வழிபட்டு அருள் பெற்றுள்ளனர்.

மூர்த்திகள் :

சுவாமி பெயர் ஸ்ரீ வில்வாரண்யேசுவரர். வில்வ வனேசுரர் என வழங்கப் பெறுகிறார். அம்பாள் பெயர் ஸ்ரீ சர்வஜனரக்ஷகி, வளைக்கைநாயகி.

தீர்த்தம் - இயம தீர்த்தம், அக்னி தீர்த்தம். (கிணறு) பிரம தீர்த்தம் (கிணறு) கொள்ளிடம் முதலியன.
தலமரம் - வில்வம்.

கல்வெட்டு :

இத்திருக்கோயில் கி. பி. 11 ஆம் நூற்றாண்டில் முதற் குலோத்துங்கசோழனால் திருப்பணி செய்யப்பெற்றுள்ளது.

1 ஸ்வஸ்திஸ்ரீ புகழ்மாது விளங்க. ஜெயமாது விரும்ப நாமகள் நிலவ மலர்மகள் புணர உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி மீனவர் நிலைகெட வில்லவர் குலை 2 தர ஏனை மன்னவர் இரியலுற்றிழிதரத் திக்கனைத் துந்தன் சக்கரம் நடாத்தி வீரசிங்காதனத்து அவனி முழுதுடையாளோடும் வீற்றிருந்தருளிய கோவிராஜ 3 கேசரி வர்மரான திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு நாற்பதாவது ராஜராஜ வளநாட்டுப் பாவை சுற்றுப்பூண்டி 4 பூண்டி உடையார் சூரியன் பவழக்குன்றினரான வளநாடுடையார் உலகுய்யவந்த சோழவள நாட்டு அண்டாட்டுக் கூற்றத்து உடையார் திருவைகாவுடை 5 ய மகாதேவர் கோயில், முன்பு இஷ்டிகையாய் ஜீரணித்தமையில் இக்கோயில் இழிச்சித் திருக்கற்றளியாகச் செய்கைக்கு யாண்டு முப்பத்திரண்டாவ 6 து விண்ணப்பஞ்செய்து இஷ்டிகை இழிச்சிவித்துக் திருக்கற்றளியும் திருவுடைக்கட்டும் திருமண்டபமும் செய்வித்து இத்தேவர் பழந்தேவதானமான 7 நிலத்து நெல்லு திருப்படி மாற்றுக்கும் நிபந்தத்திற்கும் போதாமையால் தேவதானம் பெறுகைக்கு விண்ணப்பஞ்செய்து உலகுய்யவந்த சோழவள 8 நாட்டு விறைகூற்றத்துக் களப்பாக்குடி பொத்தகப்படி நிலம் இருபதே சிந்நத்தால்நெல்லு ஆயிரத்து இருநூற்றுச் சிந்நமும் தேவதானமா 9 க இடுவித்து நிவந்தஞ் செல்லப் பண்ணுவித்தார் ராஜராஜ வளநாட்டுப் பாவை சுற்றுப் பூண்டி பூண்டி உடையார் சூரியன் பவழக் குன்றினரான 10 வளநாடுடையார் - இவர் சொல்ல இத்திருப்பணி செய்வித்நார். இக்கோயிலில் ஸ்ரீ மாயேஸ்வரர் திருவெண்காடுடையான் திருச்சிற்றம்பலமுடையானை தந்தை விரத முடித்தார்.

ஸ்ரீ T. A. சதாசிவ பண்டாரத்தார் அவர்களது 'முதற் குலோத்துங்க சோழன்' என்ற நூலை ஆதாரமாகக் கொண்டது இக்கல்வெட்டுப்பகுதி.

# இலக்கணக் கொத்தில் —
# — சைவக் கருத்துக்கள்

புலவர், திரு. இரா. செல்வக்கணபதி, எம். ஏ.,

( 36, இதழ் 7, பக்கம் 459 இன் தொடர்ச்சி )

**சைவக் கோட்பாடுகள் :**

இன்னும் வேறுபட வரும் சைவ - சமய நுட்பங்கள் பலவற்றை உரையிடையே காண முடிகிறது. ஏற்றுக்கோடல் பொருளில், இழிந்தோன் ஏற்றல், உயர்ந்தோன் ஏற்றல் என இருவகை உண்டு. இதனை விளக்க ஆசிரியர் கூறும் எடுத்துக்காட்டு

" அரிக்குச் சக்கரங்கொடுத்தான் அரன்; இழிந்தோன் ஏற்றல்
அரற்குக் கண்ணலர் கொடுத்தான் அரி; உயர்ந்தோன் ஏற்றல் "

(நூற்பா - 36 உரை) தற்கிழமை, பிறிதின்கிழமை என்னும் ஆறும் வேற்றுமைப் பகுதியினை விளக்க " முருகனது வேல், சம்பந்தனது தமிழ், சப்பந்தனது பிள்ளைத் தமிழ் " (நூற்பா - 40 உரை) என உதாரணம் காட்டுவார். சிவதலங்களைச் சிறப்பிக்க வேண்டி, ' மதுரையை நீங்கினன், மதுரையின் வடக்குச் சிதம்பரம், (நூற் 48 - உரை) என உவமை காட்டி மகிழ்விப்பார். சைவ சம்பிரதாயங்கள் சிலவற்றை,

" வேதாகமவழி விரும்பி ஒழுகினன் "

" அரனது விழாவை மிக அலங்கரித்தான் "

" சிவனது பூசையை மிகச் சிறப்பித்தான் "

(நூற்பா 80 - உரை)

என்னும் தொடர்கள் விளக்க வந்தன. சைவச் சீரடியார்களைப் போற்றும் சாமிநாத தேசிகரின் அன்பு நெஞ்சம்,

" எண்ணுயிரவரைக் கழுவி லேற்றினர் "

" அப்பர் தாம்கொண்ட விரதம் அழித்தனர் "

" ஆண்டவனைத் தூதாக அஞ்சாது நடத்தினர் "

" கடவுளை நாடோறும் கல்லால் எறிந்தார் "

" ஆண்டவன் தலையில் அடியால் மிதித்தார் "

என்னும் தொடர்கள் 'தீவினை நல்வினையாதலை' விளக்கவந்தன. இத்தொடர்கள் முறையே திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரமூர்த்தி சுவாமிகள், சாக்கிய நாயனர், கண்ணப்பநாயனர் முதலியோர் நினைவைத் தூண்டி இலக்கண அறிவோடு, சமய அறிவினையும் இணைத்து வழங்குகின்றன. ( நூற்பா 81 - உரை )

## பல்வேறு உவமைகள் :

ஆசிரியன் சமய அன்பினை விளக்கும் சில வரிகளைக் காட்டி கட்டுரையினை நிறைவிப்போம்.

" வெறுத்தஞானி வீட்டை அடைந்தான் " (நூற்பா 82 உரை)

" இவன் மான் ஏந்தி; இவன் பிறைசூடி; இவன் கங்கையாடி "

" சூரனை வென்ருன் வந்தான் " [ (நூற்பா 83 உரை)

" உல்லாச நிராகுல யோக விதசல்லாபவிநோதன் "

" ஒரு கோட் டிருசெவி முக்கணல் வாயன் " (நூற்பா 96 - உரை)

" சிவஞான சித்தியார் அபாவ அளவையுட் காண்க "

" சிவனுக்கு அடியான் சைவன் " (நூற்பா 101 - உரை)

" சிவனது சமயம் சைவம் "

" விசாக நாளில் பிறந்தவன் விசாகன் "

" அம்பலத்தில் ஆடினவன் அம்பலவன் ' (நூற்பா 122 - உரை)

" அடிஞானம் ஆன்மாவில் தோன்றும் " (நூற்பா 122 - உரை)

" நித்தியம், நைமித்தியம் காமியம் முதலிய விரதங்களால் உடன் பட்டுப் பயிறல் ஒழியின் அளவு பட்ட துன்பம் "

(நூற்பா 129 - உரை)

**தமிழ் மாந்தர் கடன் :**

இங்ஙனமெல்லாம் எடுத்தாளப்பெறும் மேற்கோள்கள் தம் சமயக் கோட்பாட்டை இலக்கணத்தே புகுத்திவிட வேண்டுமென்ற குறுகிய நோக்கில் அமைந்தனவல்ல. தாய்ப்பால் உணவாதலோடுகூட, அதுவே குழந்தைக்கு மருந்தும் ஆதல் போல, தொன்மைமிக்க செந்தமிழ் இலக்கண நெறிகளைக் கற்பார் நெஞ்சில், தொன்மைமிக்க தமிழ் மண்ணின் சைவ-சமயக் கோட்பாடுகளும் ஒப்ப வளரவேண்டுமென்ற ஆசிரியரின் அன்புணர்ச்சியே இவ்வாருன உரை நுட்பம் காட்டக் காரணமாக அமைந்தது எனப் பகுத்தறிதல் நமது கடன். அறிவினை வளர்க்கும் புறமுயற்சிகளோடு இணைந்தே ஆன்மாவினை வளர்க்கும் உள்ளார்ந்த முயற்சிகளும் அமைதல் வேண்டுமென்பதனை உணர்ந்து, இத்தகு இலக்கணப் பெரு நூல்களைக் கற்றுச் செந்தமிழும் சிவநெறியும் பேணி வளர்த்தல் தமிழ் மாந்தரின் தலையாய கடன்களாகும்.

---

## சென்ற இதழ்

அட்டையின் பின்புறம் உள்ள கணக்கின் விடை.

| | |
|---|---|
| முதலில் எடுத்துவந்த பூக்கள் ... | 101001 |
| ஒவ்வொரு பிள்ளையாருக்கும் சாத்திய பூக்கள் ... | 1000000 |

முதற் பிள்ளையாருக்கு சாத்தியவை $101001 \times 10 = 1010010$

1000000

மீதி 10010

இரண்டாவது பிள்ளையாருக்குச் சாத்தியவை $10010 \times 100 = 1001000$

1000000

மீதி 1000

மூன்ருவது பிள்ளையாருக்குச் சாத்தியவை $1000 \times 1000 = 1000000$

# சிவமூர்த்தங்கள்

"நஜன்"

( மலர் 36, இதழ் 7, பக்கம் 343 இன் தொடர்ச்சி )

இறைவனை சுந்தரமூர்த்தி சுவாமிகள் பிறைசூடி பித்தா என்றழைக்கிறார். இறைவன் ஏன் பித்தனானான்? பிறை சூடியதினாலா? ஒரு சமயம் தன்னை அவமதித்து யாகம் செய்த தக்ஷப் பிரஜாபதியைச் சிவபெருமான் தண்டித்தார். அந்தயாகத்திற்கு வந்திருந்த தேவதைகள் எல்லோருக்கும் தண்டனை கிடைத்தது. அதில்ஒருவனான சந்திரனை சிவபெருமான் காலாலே தேய்த்தார். அது அவனுக்குரிய தண்டனையானாலும் திருவடியின் சம்பந்தம் பெற்றதினாலே இறைவன் தலைமேலே இருக்கும் பேறு பெற்றான் சந்திரன். சிவபெருமான் ஒரு சமயம் தன் காலில் மிதிபட்டவனை மற்றொருசமயம் தலையில் தூக்கிவைத்துக் கொண்டார். அவனைப் பித்தன் என்று சொல்லாமல் வேறென்ன சொல்வது?

இறைவன் பித்து எப்பேர்ப்பட்டது; கருணையாகிய பித்து. "நாம் அவனை நினைக்கிறோமா?" என்று அவன் கவனித்துக் கொண்டே இருக்கிறான். நம்முடைய பக்தி வேகத்தைக் காட்டிலும் நம்மை ஆட்கொள்ள வேண்டும் என்ற, எம்பெருமானுக்குள்ள கருணையின் வேகம் மிகுதியானது. இந்தக் கருணையாகிய பித்து பிடித்தவன் இறைவன். யாரேனும் வந்து வணங்கினால் முன்பு எத்தகைய அபராதத்தை அவன் செய்திருந்த போதிலும் அதை எண்ணாமல் உடனே அவனுக்கு உயர்ந்த நிலையைத் தந்துவிடுவான். இதனைத்தான் அவன் தலையில் சூடிய பிறை காட்டுகிறது.

சந்திரன் தான் நினைக்காமலேயே இறைவனுடைய திருவடி சம்பந்தம் பெற்றான். இறைவன் திருவடி சம்பந்தம் பெறுமுன் அவன் கலை வளர்ந்தது, பின்பு தேய்ந்தது. திருமுடியிலே இடம் பெற்றபின் அது தேய்வதும் இல்லை, வளர்வதும் இல்லை; உயர்ந்த இடம், நிலையான தன்மை எல்லாம் இறைவனுடைய திருவடித் தொடர்பினால் உண்டாயின.

பித்தனாக இருந்தாலும், பிறை சூடியாக இருந்தாலும் இதற்கெல்லாம் மூல காரணமாக இருப்பது அவனது அருள். அத

ளல்தான் " பித்தா " என்று அழைத்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனைப்பிறைசூடிஎன்றும் அருளாளாஎன்றும்குறிப்பிடுகிறார்.

உஷ்ணமும் ஒளியும் சேர்ந்தேயிருக்கும். முதலில் தாபத்தை உண்டுபண்ணி ஒளியைக் கொடுப்பது சூர்யன். அப்பப்பா! என்ன வெய்யில் என்று சலித்துக்கொள்கிறோம். தாபத்தை சமனம் செய்து பின்பு ஒளியைத் தருவது சந்திரன். தாபத்தில் நமக்குப் பிரியமில்லை ஆனால் பிரகாசம் மட்டும் தேவையாக இருக்கிறது.

உஷ்ணமில்லாத பிரகாசத்தைத் தருபவன் சந்திரன். அப்பிரகாசத்தைக் குளிர்ச்சியோடு தருகிறான் அவன். அதனால் அவனுக்கு அமிருத கிரணன் என்று ஒரு பெயர் உண்டு.

காளிதாசன் சிவபெருமானை ஸம்யமி என்று குறிப்பிடுகிறார். இந்த ஸம்யமி என்பது சந்திரமௌலீஸ்வரரைக் குறிக்கும். சிவபெருமான் அஷ்டமியன்றிருக்கும் அர்த்த சந்திரனைத்தான் தன் சிரஸில் வைத்திருக்கிறார். அதனால் அவர் சந்திரார்த்த மௌலீ எனப்படுகிறார்.

கிருஷ்ணமித்திரர் என்பவர் ஒரு மங்கள சுலோகம் எழுதியிருக்கிறார்.

" அந்தர் நாடீ நியமித மருல்லங்கித ப்ரம்ஹ ரந்த்ரம்
ஸ்வாந்தே சாந்தி ப்ரணயி நி ஸமுந்மீல தாநந்த ஸாந்த்ரம்!
ப்ரத்யக் ஜோதிர் ஜபதி யமிந: ஸ்பஷ்டலாலாட நேத்ர
வ்யாஜவ்யக்தீ க்ருதமிவ ஜகத் வ்யாபி சந்த்ரார்த மௌலே !! "

மனதிற்கு சந்தோஷத்தைக் கொடுத்து இன்பத்தைத் தருபவன் சந்திரன் இந்தச் சந்திரனைத் தரித்த பரமேஸ்வரன் ஞானத்தை அருளுபவனாக இருக்கிறான்.

சந்திரசேகரர் உத்ஸவமூர்த்தி இல்லாத சிவன் கோவிலே இல்லை எனலாம். சில இடங்களில் இவரே பிரதோஷ மூர்த்தி என்றழைக்கப்படுகிறார்.

சந்திரசேகரர் எப்போதும் உமையுடன்தான் காணப்படுவார். பொதுவாக இருவரும் தனித்தனியே காணப்பட்டாலும் சில இடங்களில் இறைவன் அம்பிகையை அணைத்தபடி காணப்படுகிறார். இம்மூர்த்தம் ஆலிங்கன சந்திரசேகரர் என வழங்கப்படும். தஞ்சைப் பெரிய கோவிலில் உள்ள விமானத்தி லுள்ள ஒரு மாடத்தில் இந்த உருவத்தைத் தரிசிக்கலாம்.

(தொடரும்)

உ

சிவமயம்

## வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்,

### வைத்தீசுவரன்கோயில்.

சீகாழி வட்டம் – தஞ்சை மாவட்டம்.

# திருவிளக்கு அறக்கட்டளை நிதி

**மாயூரம் இந்தியன் வங்கியில் உள்ள முதலீடுகள் விபரம்**

( மலர் 36, இதழ் 7, பக்கம் 363 இன் தொடர்ச்சி )

61 திரு. எம். ஜே. சுவாமி, அட்வகேட்
திலக்ரோடு, ஹைதராபாத் ரூ. 1000.
62 திரு. எஸ். சுப்பிரமணியம், அடையாறு சென்னை ... 1000.
63 திரு. ஆர். முத்துசாமி,
இந்திராநகர், அடையாறு சென்னை ... 1000.
64 திரு. எஸ். இராஜகோபால், குத்தாலம் ... 1000.
65 திரு. டி. ஷண்முகம், காஞ்சீபுரம் ... 1000.
66 திரு. பி. ஜானகிராம நாயக்கர் & யசோதையம்மாள்
தியாகராயநகர் சென்னை ... 1000.
67 திரு. பி. கே. வெங்கட்ராமன்,
தியாகராயநகர் சென்னை - 17 ... 1000.
68 திரு. சிதம்பரம்செட்டியார் & மரகதம், நெற்குப்பை ... 1000.
69 திரு. என். வெங்கட்ராமன்,
நங்கநல்லூர், சென்னை ... 1000.
70 திரு. ஆர். நடராஜன், அஸ்ஸாம் ... 1000.
71 திரு. எஸ். சுப்பிரமணியன், புத்தூர், திருச்சி-17 ... 1000.
72 திரு. சுந்தரவேல், ஈரோடு ... 1000.
73 உண்டியல் நிதி ... 1000.
74 திரு. எஸ். சி. சுப்பிரமணிய பிள்ளை,
பனங்காடி, கச்சனம் அஞ்சல் ... 1000.
75 திரு. சி. கனகராஜ், பாண்டிச்சேரி ... 1000.
76 திரு. ஆர். நடேசன், புதுடில்லி ... 1000.

# செய்திகள்

## ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின்
## ஆயில்யத் திருநாள் வழிபாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களது மாத ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் வழிபாடு 21—6—77 செவ்வாய்க் கிழமையன்று திரு வைகாவூர் ஸ்ரீ வளைக்கைநாயகி உடனுகிய ஸ்ரீ வில்வவனநாதர் திருக்கோயிலில் காலை 8 மணி அளவிலும், கொள்ளிடத்தின் தென் கரைத் தலமாகிய திருவிசயமங்கை (தேவாரம் பாடிய தலம்) ஸ்ரீ மங்கை நாயகி உடனுகிய ஸ்ரீ விசயநாதர் திருக்கோயிலிலும் கொள்ளிடத்தின் வடகரைத் தலமாகிய திருவிசயமங்கை (கோவந்தபுத்தூர், தேவாரப்பாடல் பெற்ற தலம்). ஸ்ரீ மங்கள நாயகி உடனுகிய ஸ்ரீ கங்காஜடேசுவரர் திருக்கோயிலிலும் காலை 10 மணி அளவிலும், திருப்புறம்பயம் ஸ்ரீ கரும்படுசொல்லம்மை உடனுகிய ஸ்ரீ காட்சிநாதர் திருக்கோயிலில் மாலையிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. அவ்வத்தலத் தேவாரத் திருப்பதிகங்கள் அடங்கிய நூல் வெளியிட்டு வழங்கப்பெற்றது. வழிபாட்டின்போது அவ்வத்தலத் தேவாரத் திருப்பதிகப் பாராயணம் நிகழ்த்தப் பெற்றது. திருப்புறம்பயத்தில் இரவு 7 மணி அளவில் திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம். ஏ., அவர்களாலும் புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ. அவர்களாலும் சமய விரிவுரைகள் நிகழ்த்தப் பெற்றன. அன்பர்கள் பலர் கேட்டுப் பயன் பெற்றனர்.

## மாணிக்கவாசக சுவாமிகள் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் 22—6—77 புதன் கிழமை காலை 8-30 மணிக்கு சைவ சமயாசாரியர்களுள் நான்காமவராகிய ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காலை மாலை இரு வேளைகளிலும் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளினார்கள். இரவு ஆதீன ஓதுவாமூர்த்திகளின் திருவாசக பாராயணத்துடன் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் புறப்பாடும், அன்று மாலை

7 மணி அளவில் கீழ்க்காணுமாறு சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்ந்தன. தருமையாதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., அவர்கள் " திருவாசகம் — திருக்கோவையார் " என்னும் தலைப்பிலும், வித்துவான், திரு. கா. ம. கண்ணப்பன் அவர்கள் " மாணிக்கவாசகர் அருள் வரலாறு " என்னும் தலைப்பிலும் விரிவுரையாற்றினார்கள். அன்பர்கள் பலர் வந்து விரிவுரைகளைக் கேட்டுப் பயன் பெற்றனர்.

## சென்னை, தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில்,

மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு :

சென்னை தருமையாதீன சமயப் பிரசார நிலையச் சார்பில் மாதாந்திர சமயப் பிரசார வழிபாடு 26—6—77 ஞாயிற்றுக் கிழமை மாலை சென்னை லிங்கிச் செட்டித் தெருவிலிருக்கும் ஸ்ரீ மல்லிகேசுவரர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. சுவாமிக்கும் அம்பாளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அர்ச்சனையும் செய்யப்பட்டன. ஆலயத்தில் உள்ள எல்லா மூர்த்திகளுக்கும் அர்ச்சனை செய்யப்பட்டது. வழிபாட்டின்போது தேவார இசைமணி திரு. N. இராமலிங்கமும், திரு N. இராம மூர்த்தி அய்யரும் திருமுறைப் பாராயணம் செய்தனர். குமாரி கௌரி அபிராமி அந்தாதிப் பாடல்களைப் பாடினார்.

வழிபாட்டிற்குப் பிறகு சமயப் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. திரு. R. சிவஞானம் செட்டியார் அவர்கள் வரவேற்புரைகூறி அனைவரையும் வரவேற்றார்கள். திரு. பூ. ஆலாலசுந்தரம் செட்டியார் அவர்கள் சென்னையிலுள்ள ஆலயங்களில் வழிபாடு நடத்துவதோடு நில்லாமல் நகரத்திற்கு வெளியே யுள்ள கோயில்களிலும் வழிபாடு நடத்தவேண்டும் என்றும், பழஞ்சிறப்பு வாய்ந்ததும், மீஞ்சூருக்கு அருகில் உள்ளதுமான மேலூர் ஆலயத்திற்கு வழிபாட்டுக் குழுவினர் செல்ல வேண்டும் என்றும் மீண்டும் பாடல்பெற்ற தலங்களுக்கு யாத்திரை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். மேலும் அன்பர்கள் தத்தம் குழந்தைகளுக்குத் தேவாரத் திருமுறைப் பாடல்களைக் கற்பிக்க வேண்டும் என்றும் விருப்பம் தெரிவித்தார்கள். திரு. V. N. ஆறுமுகம் அவர்கள் அன்பர்களுக்கும், அறங்காவலர்களுக்கும் சிவாசாரியர்களுக்கும் நன்றி கூறிய பின் கூட்டம் நிறைவுபெற்றது.

## நாயன்மார்கள் குருபூஜை விழாக்கள் :

சென்னை தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் திருஞானசம்பந்தர், முருக நாயனார், திருநீலநக்க நாயனார், திருநீலகண்டயாழ்ப்பாணர் குருபூஜை விழா 3—6—77 அன்றும் கழற்சிங்க நாயனார், மாணிக்கவாசகர், அமர்நீதி நாயனார் குருபூஜை விழா முறையே 13—6—77, 23—6—77 நாட்களிலும் நடைபெற்றது. இந்நாட்களில் பெரியபுராணம்படிக்கப்பெற்றது. அன்பர்கள் பலர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

## திருக்கோவையார் பெரிய புராண விளக்கவுரை :

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் 26—6—77 அன்று பெரிய புராணத்தில் உள்ள திருஞான சம்பந்தரின் வரலாற்றின் விளக்கவுரை திரு. S சிவகுமார், M. A., அவர்களால் நிறைவு செய்யப்பெற்றது. 27—6—77 அன்று திருக்கோவையார் விளக்கவுரை திரு. N. R. முருகவேள், M. A., அவர்களால் தொடர்ந்து நடத்தப்பட்டது அன்பர்கள் பலர் வந்து கேட்டுப் பயன்பெற்றனர்.

## கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா :

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் புதன் கிழமையன்று மாலை 7-00 மணியளவில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா திரு. V. N. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி படத்திற்கு அர்ச்சனை செய்தபிறகு நிலைய ஓதுவார் திரு. S. ஞானப்பிரகாசமும், திரு. N இராமமூர்த்தி அய்யரும் வேளூர்ப் பதிகங்களைப் பாடினார்கள். தலைவர் அவர்கள் ஸ்ரீ முருகப்பெருமானை நாம் வழிபடும் தெய்வமாகக் கருதி நம் தவறுகளை உணர்ந்து அவனை பிரார்த்தனைசெய்தால் அவன் அருள் கிடைக்கும். தீராதநோய் களைத் தீர்ப்பான். வினைகளை நீக்குவான். நாளை வழிபடலாம் என்று நினைக்காமல் இப்பொழுதே சென்று அவனை உள்ளம் உருகி வழிபட்டுப் பயன்பெற வேண்டும் என்று கூறினார்கள். திரு. R. சிவஞானம்செட்டியார் அவர்கள் எல்லோருக்கும் நன்றி தெரிவித்தார்கள். கிருத்திகைப் பிரசாதம் அனைவருக்கும் வழங்கப்பெற்றது.

உ
சிவமயம்

# ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதும், ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பதும் நம் நாட்டில் வழங்கும் பழமொழிகள் மக்களைத் திருக்கோயில் வழிபாட்டில் ஈடுபடுத்தி, சைவ - சமயப் பெருமைகளை அறியச் செய்து உய்விக்கவேண்டுமென்ற பெருங்கருணையால் தருமையாதீனம் 26 வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தமது குருமூர்த்திகள் காட்டியருளிய வழியிலேயே தமது ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளிலும் பாடல் பெற்ற தலங்கள்தோறும் முறையான வழிபாட்டிற்கு வழி காட்டி வருகிறார்கள். மாதந்தோறும் காவிரி வடகரைத் தலங்களில் வழிபாடு நடைபெறுகின்றன. உழவாரப்பணி விசேட அபிடேக ஆராதனைகள், தலத் திருப்பதிகங்களை அச்சிட்டு ஓதி வழங்குதல், சமயப்பிரசாரம் முதலியன ஆயில்யத் திருநாள் வழிபாட்டின் அங்கங்களாகும்.

பிங்களஸ்ரீ ஆடித்திங்கள் 3-ஆம் நாள் (18—7—77) திங்கட்கிழமையன்று மாத ஜன்ம நட்சத்திரமாதலின் கீழ்க் காணும் திருத்தலங்களில் வழிபாடு சிறப்புற நடைபெறும்.

(1) வடகுரங்காடுதுறை ஸ்ரீ அழகுசடை முடியம்மை உடனுகிய குலைவணங்கீசுவரர் திருக்கோயிலில்காலை மணி 8 முதல் 10 வரை விசேஷ அபிஷேக ஆராதனைகளும் வழிபாடும் நிகழும்.

(2) திங்களூர் ஸ்ரீ பெரியநாயகியம்மை உடனுகிய ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோயிலில் நண்பகல் 10-30 மணி முதல் 12-மணி வரை விசேஷ அபிஷேக ஆராதனைகளும் வழிபாடும் நிகழும்.

(3) திருப்பழனம் ஸ்ரீ பெரியநாயகியம்மை உடனுகிய ஸ்ரீ ஆபத்சகாயேசுவரர் திருக்கோயிலில் மாலை 6-மணி முதல் 7-மணி வரை விசேஷ அபிஷேக ஆராதனைகளும் வழிபாடும் நிகழும்.

திருப்பழனம் திருக்கோயிலில் இரவு 7-மணி முதல் சமய விரிவுரை:-

**வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.**

**வித்துவான். திரு. ஆபத்சகாயம்**

அனைவரும் வருக! வழிபட்டு உய்க! அரன் அருள் பெறுக!

# எதிர்காலம்

ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(பிங்களஹு ஆடிமீ 1வ முதல் 32வ முடிய)
(16—7—1977 முதல் 16—8—1977 முடிய)

ஸ்ரீ பிங்களஹு ஆடிமீ 1வ ஸ்திரவாரம் புனர்பூச நக்ஷத்திரத்தில் கிமுஸ்துகான கரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 22 நாழிகை 18 விநடிக்கு விருச்சிக லக்னத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரிய பகவான் லோக சுபிட்சத்தை முன்னிட்டு மிதுன ராசியிலிருந்து கடகராசி சங்கிரமணமாக பிங்களஹு ஆடி மாதப் பிரவேசம் செய்கிருர். அன்று தக்ஷிணுயன புண்ணிய காலமாகும். சங்கிரமண வாராதிபதி சனீஸ்வரன் ஸஸ்யாதிபதியாகிருர். சங்கிரமணகால கிரகஸ்திதியின்பலனுவது லோக சுபிட்சார்த்தமாக உலகெங்கும் பருவமழை ஏற்பட்டு ஸஸ்ய தானிய பயிர்கள் கரிசல் பூமி பயிர்கள் யாவும் செழிக்கும். தேசங்களில் எங்கும் ஆன்ருேர்களால் பிரஜா சம்ரக்ஷண சேவாதர்மங்கள் வெகுவாக நடைபெற்றுக்கொண்டிருக்கும். தர்ம ஸ்தாபனங்களில் உள்ளகர்த்தாக்களால் தெய்வகைங்கரியங்கள் ஆலயத்திருப்பணிகளுக்கான திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் திகழ்கின்ற பரமாசாரியர்கள் ஜகத்குருமார்களின் அருளுபதேச புனித வழியில் இவ்வுலகம் இயங்கும். தேவாலயங்களில் தெய்வ ஆராதனைகள் நித்தியம் ஆறுகால பூசைகள் சிறப்புற நடைபெற்றுவரும். தேசங்களில் நியமனமாகியுள்ள மக்கள் பிரதிநிதிகள் ஜனுதிபதிகள் நீதிபரிபாலன செயல்முறைகளை மேற்கொள்வர். பிரஜைகள் அனைவரும் தெய்வ பக்தி யுடையவர்களாகி நெறியுடன் செயல்புரிந்து முன்னேற்ற வாழ்க்கை நடத்துவார்கள்.

## குருப்பெயர்ச்சி

குறிப்பு :- இவ்வாண்டில் அதாவது கலியுகாப்தம் 5078 தமிழ் செல்லாநின்ற பிங்களஹு ஆடிமீ 1வ (16—7—77) ஸ்திரவாரம்

சூரிய உதயம் முதல் 34 நாழிகை 21 விநாடிக்கு ஸ்ரீ குருபகவான் ரிஷபராசியிலிருந்து மிதுன ராசியில் பிரவேசிக்கிறார். மேலும் இவ்வாண்டு குரு தனது அதிசார கதியிலோ வக்கிரகதியிலோ வேறு ராசியில் மாறுதல் அடையாமல் மிதுன ராசியிலேயே சஞ்சரித்து பலனை அளிப்பார். எல்லா ராசிகளுக்கும் குரு இருக்கும் ஸ்தான கிரமத்தின்படி பலா பலன்கள் ஏற்படும்.

ரிஷபம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் இந்த ராசிகளுக்கு தன தானிய சம்பத்து, புத்திர பாக்கியம், விவாக பிராப்தி வெகு சௌக்கிய அனுபோகம், பிரபுத்துவம், இராசாங்க வதிகார யோகம் முதலிய நற்பலன்கள் ஏற்படும்.

மேஷம், மிதுனம், கடகம், கன்னி, விருச்சிகம் மகரம் மீனம் இந்த ராசிகளுக்கு ஹரோ ஜாகையோ மாறுதல் அலைச்சல், தட்ட இயலாத வகையில் அதிக செலவு, புத்திர ரோகம், சிலேத்தும வியாதி, பந்தனம் எதிர் பார்த்த பொருள் வராமல் இருத்தல், மூல உபத்திரவம், வீண் பழி உண்டாகுதல் முதலிய மாறுதல் பலன்கள் ஏற்படும்.

எல்லா ராசியையுடையோரும் குருவாரத்தில் அருள்மிகு தெக்ஷிணாமூர்த்தி சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபட்டு வேத பிராமணர்களுக்கு புஷ்பராக ரத்தினம், கனக வர்ண வஸ்திரம், ஸ்வர்ணம் ஆகியவை தானம் செய்துவர சகல நன்மையும் ஏற்படும்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

( சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ. )

மேஷ ராசி 9 பாதங்களும் சுமார்பலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வரவு திருப்திகரமாக இருந்துவரும். சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். வித்தியா வியாபாராதி கலைத் துறையில் அடுத்தடுத்து அனுகூலம்தரும். பூமி இயந்திரங்களின் அபிவிருத்தியில் தீவிர முயற்சியையும், காரிய சாதனையையும் உண்டுபண்ணும். புத்திரரின் கலை தொழில் துறையில் பிரயாசையுடன் ஓரளவு நன்மையைத்தரும். தாம்பத்திய வாழ்க்கை சுமுகமாக நடந்துவரும். செய் தொழில் அல்லது உத்தியோகத்தில் அலுவல்கள் உடனுக்குடன் பூர்த்தியாக நடந்துவரும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை¾ – உரோகிணி – மிருகசீர்ஷம்½

( இ. ஊ. ஏ. – ஓ. வ. வி. வு. – வே. வோ. )

ரிஷப ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும் பண வசதி போஜன சௌகரியம் நன்றாக இருந்துவரும். பந்து மித்திரர்

களின் வருகை சந்துஷ்டியான நற்சம்பவங்கள் ஏற்படும். வித்தியா வியாபாராதி கலைத்துறையில் அரசாங்கப் புகழ்தரும். வியாஜ்ஜிய வழக்குகளில் வெற்றியை உண்டுபண்ணும். தார புத்திரர்களின் சௌகரியம் நன்ருக இருந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றமும் செல்வாக்குகளும் ஏற்படும். சனி ஞாயிறு சுபமாகும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾
( கா. கி. – கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ. )

மிதுன ராசி 9 பாதங்களும் சுமார் பலனுக நடக்கும். பணம் வரவைப் போல சரி சமனுக செலவாகிக்கொண்டிருக்கும். சகோதர சௌகரியத்தை முன்னிட்டும் விவசாயத்திலும் பொருட் செலவுகள் மிகும். வித்துவத்துவம் கலைத்துறையில் சாதாரண பலனுக இருந்துவரும். தார சௌக்கியம் புத்திர சௌக்கியம் நன்ருக இருந்துவரும். செய்தொழில்களில் அலைச்சலும் ஆயாசமும் ஏற்படினும் மனோ தைரியம் மேலிட்டு அலுவல்கள் திறம்பட நடந்துவரும். செவ்வாய் புதன் சுபமாகும்.

4. கடகம்– புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்
( ஹி. – ஹு. ஹே ஹோ. ட. – டி. டு. டே. டோ. )

கடக ராசி 9 பாதங்களும் சுமார் பலனுக நடக்கும். பணவரவுகளில் குறைவின்றி நல்ல நிலைமையை உருவாக்கும். சுப விசேஷங்களில் நிறுத்த முடியாத செலவையும் ஏற்படுத்தும். வித்துவத்துவம் கலைத்துறையில் புகழ் உண்டாகும். ஓர் தீர்த்தயாத்திரை சம்பவிக்கும். சரீரம் உஷ்ணம் பொருந்தியிருக்கும். ஞாயிற்றுக் கிழமையில் சூரியார்ச்சனை செய்ய நலம்தரும். இது காலம் பாகப் பிரிவினைகள் நில புலன்களில் உள்ள வழக்குகள் சுமுகமாக தீர்வு காணும். தார புத்திரர்களின் நலன் நன்ருக இருந்து வரும். செய்தொழில்களில் அபிவிருத்தி பலன் காணும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼
(ம. மி. மு. மெ. – மோ. ட. டி. டு. – டே. )

சிம்மராசி 9 பாதங்களும் சுமார் பலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் எதிர்பாராத செலவினங்கள் ஏற்படினும் சமயோசித வருமானங்கள் மூலம் நிலைமையை சமாளித்தல் ஆகும். 12உ க்கு மேல் சகல விஷயங்களிலும் நன்மையை உண்டாக்கும். பூமி இயந்திரங்களின் முயற்சியில் அபிவிருத்தி பலன் ஏற்பட்டுவரும்

தாம்பத்திய வாழ்வில் சுமூகம் நிலவும். செய்தொழிலில் காரியங்கள் வெற்றிகரமாகச் செயல்படும். மனவமைதி ஏற்படும். சனி ஞாயிறு சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½
(டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் போதிய பணவசதியும் சௌகரியங்களும் இருந்துவரும். சகோதர மனஸ்தாபம், பிதாவின் உடல் நலம் பாதிப்பு ஆகியவற்றில் அல்லல் காட்டி நீக்கும். ஜீவனோபாய பிரவிருத்தியில் செலவுடன் அனுகூலம் தரும். பெண்கள் வகையில் ஓர் மனஸ்தாபம் வந்து நீங்கும். பூர்வ சொத்து பாத்தியதையில் வழக்கு வந்து வெல்லும். செய்தொழிலில் மாறுதல் சம்பவிக்கும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾
(ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. தூ. தே.)

துலாராசி 9 பாதங்களும் சுப பலன்தரும். தனகாரகன் வலுவால் வருமானங்கள் குறைவு படாமல் விருத்தியாகவே இருந்துவரும். சகோதர சௌக்கியம் நன்றாக இருந்துவரும். வித்தியா வியாபாராதி எழுத்துத் துறையில் ஆதாயங்களை ஏற்படுத்தி வரும். புத்திரர்களின் தொழில்துறை நாளுக்குநாள் முன்னேற்றமாக விளங்கும். தாம்பத்திய வாழ்வில் சொற்பமான சங்கடங்கள் வரினும் சௌகரியங்கள் குறைவு படாமல் இருந்துவரும். செய்தொழில்கள் சிறப்பாக நடந்துவரும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.
(தோ. – ந. நி. நு. நெ. – நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். குடும்பத்தில் பணச் செலாவணியில் சொற்ப சிரமங்கள் தென்பட்டாலும் ஓர் அளவிற்கு சமயோசித வருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சகோதரர் மனக்குறை வருவதும் சரி செய்தலும் ஆகும். பூமியந்திரங்களில் பிரயத்தனத்தின்மீது முன்னேற்றம் காணும். பெற்றோருக்கு உடல்நல பாதிப்பு வந்து வைத்தியத்தால் குணமாகும். 7 ௨ முதல் எல்லா விஷயங்களிலும் நன்மைக்குரிய சூழ்நிலையை ஏற்படுத்தும். செய்தொழில்களில் விருத்திக்குரிய நிலைமையை உருவாக்கும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

( யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே. )

தனுர் ராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவரவு ஓரளவு வந்துகொண்டிருக்கும். பிரபு நேசமும் மேலோர் பெரியோர்களால் அனுகூல நன்மைகளும் ஏற்படும். சகோதரர் விசுவாசம் ஒத்துழைப்பு மிச்சிரமாக இருந்து வரும். பூமி இயந்திரங்களில் ஓரளவு விருத்தியாகத்தென்படும். முன்பிருந்த ரூணங்கள் தீர்ந்து புதியன ஏற்படும். வித்தியா வியாபாராதி எழுத்துத் துறைகள் மந்தநிலைமையாக இருந்து கொண்டிருக்கும். தாம்பத்திய வாழ்வு சாதாரணமாக நடந்து வரும். செய்தொழில்களில் கடமைகள் நடந்துவரும். சந்திராஷ்டமம் நீங்கிய வியாழன் வெள்ளி சுபமாகும்.

10. மகரம் – உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

( போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி. )

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் வருமானங்கள் மந்தப்படுதலும் ருண தன சேர்க்கைகள் மூலம் சமாளித்தலும் ஆகும். 7உ முதல் வித்தியாவியாபாராதி மதி நுட்ப கலையில் ஸ்லாக்கிய பலன் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். விவசாய பிரயத்தனங்களில் சாதாரண பலனாக இருந்துவரும். மனைவிக்கு உஷ்ணம் பித்தம் இவற்றால் நலிவுவந்து குணமாகும். புத்திரரின் போக்கில் மனோவேக நிலையும் அவருக்கு விபத்து ஏற்படுவதும் ஆகும் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய நலம் தரும். செய்தொழில்கள் சாதாரணமாக நடந்து வரும். சனி ஞாயிறு சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾

( கு. கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. த. )

கும்பராசி 9பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபி விருத்தியில் சமயோசித வருமானங்களும் போஜன சௌகரியங்களும் திருப்திகரமாக இருந்துவரும். பூமி இயந்திரங்களின் அபிவிருத்தியில் அலைச்சலின் பின் விருத்தி பலன் காணும். கணவன் மனைவியின் விசுவாசம் ஒற்றுமை மேலாக இருந்துவரும். புத்திரரால் சமயோசித உதவியும் பாக்கிய விருத்தியும் ஏற்படும். வித்துவத்துவம் எழுத்துமுதலிய லேவாதேவிகளில் சாதாரண பலனாக இருந்துவரும். உத்தியோகத்தில் சிரம சூழ்நிலை ஏற்படினும் அந்தஸ்து குறைவின்றி நடத்தி வரும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

## 12. மீனம் - பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி- ரேவதி.

( தி. து. ஸ. ச. த. - தே. தோ. ச.சி. )

மீனராசி 9 பாதங்களும் சாதாரண பலனுக நடந்துவரும். குடும்பத்தில் பணவசதி போஜன சௌகரியம் பசு பால் பிராப்தி யில் குறைவின்றி இருந்துவரும். 4-7 க்குடைய புதன் நிலைமை யால் பந்துக்களால் கௌரவிக்கப்படுவதும் தாம்பத்தியவாழ்வில் சௌகரியங்களும் நாகரிக சாதனங்களின் அனுபோகங்களும் மகிழ்ச்சியாக இருந்துவரும். புத்திரருக்கு தொழில்துறையில் இலாபமும் விரயமும் கலந்து இருந்துவரும். தற்காலம் சூரிய கிரகபிரீதிசெய்ய ரோகபயம் நீங்கும். செய்தொழிலில் சௌகரி யங்கள் ஏற்படும். புதன் வியாழன் சுபமாகும்.

---

## பார்வையாளர் குறிப்புக்கள்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர்

தொன்மை வாய்ந்த இத்திருக் கோயிலுக்கு இன்று என் குடும்பத்துடன் வந்திருந்து வணங்கும் அரிய வாய்ப்பினைப் பெற்று அகமகிழ்ந்தேன். தமிழில் பாடிய இனிய பாடல்களின் பொருளுணர்ந்து இன்புற்றேன். தூய்மை நிறைந்த இடம் தூய்மையாகவே உள்ளது கண்டு மகிழ்கின்றேன். வரவேற்று உபசரித்த அனைவருக்கும் உளங்கனிந்த நன்றி.

(Sd.) Balraj

10—2—77. Collector, Pudukottai.

* * * *

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagateswaraswamy Devasthanam, Tirukkadaiyur.

A great temple with great traditions. I enjoyed an hourof usefull and benifiting times.

(Sd ) A. A. R. Prabbu,

25—11—76 Commissioner of Income Tax.

Madras.